உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-ஙங.] புவஙூ பங்குனிமீ [பகுதி-ரு.

Vol. XXXIII. *March—April 1936.* No. 5.

## உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ககஎ—கஉஅ

திருவள்ளுவர்காலம்:—ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (HONS.) கஉகூ—கஙஉ

பாண்டியர்வரலாறு:-ஸ்ரீமத் T. V. சதாசிவபண்டாரத்தார் கஙங-கஙசு

மலரி:— ஸ்ரீமத். திரு. சோமசுந்தரதேசிகர் கச0

குன்னூர்ப் பெரியவீட்டுக் குமாரசுவாமிமுதலியார்:- ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் B.A. கசக—கசசு

சரமகவிகள்:—ஸ்ரீமத். மு. ரா. அருணாசலக்கவிராயர். கசசு-கசஅ

சிராமலைக்கோவை:- (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 65—72

சூடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:— ஸ்ரீமத். செ. அப்புவையங்கார். 17-24

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

-ன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

HANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and
ARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press,
No. 54, New Jail Road, Madura.

215049

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இனியும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் | ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி | ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பருங்கலக்கணங்கள் | ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் | ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு | ... ... ... | | | |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம் | | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் | ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் | ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதான சிந்தாமணி | ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அழுதாம்பிகைபிள்ளைத்தமிழ் | ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா | ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி | ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) | ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | ... | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௩.] யுவ௵ பங்குனி௴ [பகுதி-௫.
Vol. XXXIII. March—April 1936. No. 5.

## நியாயப்பிரவேச மணிமேகலை.

[௯௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### 3. தர்மிஸ்வரூபவிபரீதசாதநம்.

இனி, தர்மிஸ்வரூபவிபரீதசாதனம் சொல்லப்படும். அது, நியாயப்பிரவேசத்திலும் மணிமேகலையிலும் சொல்லளவாற் பெரும்பாலும் ஒன்றுபட்டுத்தோன்றுமாயினும், பொருள்நோக்காற் பெரிதும் வேறுபட்டுள்ளது.

அவ்விரண்டுநூலுள்ளும் இவ்வேதுப்போலிநிரூபணம் பொருளினிதுபுலப்படாத தொடர்மொழிகளால் வரையப்பட்டிருக்கிறது; சொற்பிழைகளும் உள்ளன. அவை ஆங்காங்குக் காட்டப்படும். அவற்றை உற்றுநோக்கி ஆராயுமிடத்து இவ்விரண்டுநூல்களுக்குமே முதனூலாயுள்ளதொன்றில் இவ்வேதுப்போலிநிரூபணம் தெளிவுபெறாதிருக்கச்செய்தே அதன் தாற்பரியந்தோன்றாத சொற்றொடர்ப்பொருள்கொண்டு இவ்விருநூலாசிரியரும் தத்தமக்குத் தோன்றியவாறு எழுதியிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

நியாயப்பிரவேசத்தில் இவ்வேதுப்போலிநிரூபணம் வருமாறு:—

𑌧𑌰𑍍𑌮𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑌾𑌧𑌨𑍋 𑌯𑌥𑌾 ?
𑌨 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌗𑍁𑌣𑍋 𑌭𑌾𑌵𑌃
𑌏𑌕𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌗𑍁𑌣 𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌚 𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 ।
𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌦𑌿𑌤𑌿 ।
𑌅𑌯𑌂 𑌹𑌿 𑌹𑍇𑌤𑍁𑌰𑍍 𑌯𑌥𑌾 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍇𑌧𑌂
𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑌯𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌭𑌾𑌵𑌸𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌤𑍍𑌵𑌮𑌪𑌿
𑌸𑌾𑌧𑌯𑌤𑌿 । 𑌉𑌭𑌯𑌤𑍍𑌰𑌾𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍 ।

இதன்பொருள்: ' "தர்மிஸ்வரூபவிபரீதசாதனம் எங்ஙனமெனில், பாவபதார்த்தம் திரவிய குண கருமங்களன்று; ஏகத்திரவியமுடைமையாலும் குணகருமங்களில் உண்மையாலும்; சாமாநியவிசேடம்போலும்." இவ்வேதுவானது எங்ஙனம் திரவியமுதலியவற்றின் வேறாதலை, பாவத்துக்குச் சாதிக்கிறதோ? அங்ஙனமே பாவத்துக்கு அபாவத்தன்மையையும் சாதிக்கிறது; இரண்டுபக்கத்திலும் பிறழ்ச்சியில்லாமையால்' என்பது.

இதிலுள்ள பக்ஷவசனமும் திருஷ்டாந்தவசனமும் சொல்லளவால் மணிமேகலையோடு ஒப்புமையுடையவாயினும், ஏதுவசன வேறுபாட்டாலும், விருத்தியுரைகூறும் பொருள்வேறுபாட்டாலும் மணிமேகலையொடு பெரிதும் வேறுபட்டன.

'அநேகத்திரவ்யவத்வாத்' என்றிருக்கவேண்டிய ஏதுவசனம் தவறாக 'ஏகத்ரவ்யவத்வாத்' என்று எழுதப்பட்டிருப்பதை மூலபாடமாகக்கொண்டு இதன் விருத்தியுரைகாரர் மிகவும் இடர்ப்பட்டுப் பொருள்விரித்துரைத்துச்சென்றனர்.

நியாயப்பிரவேசத்திலும் மணிமேகலையிலும் இவ்வேதுப்போலியுதாரணங்களின் பக்கவசனங்களில் பக்கப்பொருட்பெயர் பாவம் என்று ஒருபடியே சொல்லப்பட்டிருக்கிறது.

அதற்கு நியாயப்பிரவேசவிருத்தியில் திரவிய குண கருமங்கள் மூன்றிலும் ஒருங்குசேர்ந்துள்ள பரமஸத்தாஜாதி என்று பொருள் சொல்லப்பட்டது.



மணிமேகலையிலுள்ள பாவம் என்னும் அப்பெயர், திரவியம் குணம் கருமம் சாமானியம் விசேடம் சமவாயம் என்னும் ஆறுவகையான பாவபதார்த்தங்களின் தொகுதி என்று பொருள்கொள்ளக் கிடக்கிறது.

நியாயப்பிரவேசத்துள்ள ஏதுவசனம், ஏகத்திரவியமுடைமையாலும், குணகருமங்களிலுண்மையாலும் என இரண்டுபட்டதாய்ச் சொல்லாலும் பொருளாலும் வேறுபட்டிருக்கிறது.

மணிமேகலையிற் சொல்லப்பட்ட ஏது, 'எல்லாத் திரவிய குண கருமங்களிலுமுள்ள பராபரஜாதிகளின் வேறாதலால்' என்று சொல்லாலும் பொருளாலும் முழுதும் வேறுபட்டது.

நியாயப்பிரவேச திருஷ்டாந்தவசனம் 'சாமாநியவிசேடம் போல' என்பது. அதாவது: பரசாமாநியஜாதியின் விசேடமாகிய திரவியத்துவ குணத்துவ கருமத்துவம்போல் என்றபடி. இது மணிமேகலைத் திட்டாந்தவசனத்துட் சொல்லப்பட்ட விசேடபதார்த்தத்தின் வேறாயுள்ளது.

மணிமேகலையிலும் 'சாமானியவிசேடம்போல' என்றே இரண்டிடத்தும் எழுதப்பட்டிருக்கிறது; அது, 'சமவாயவிசேடம்போல' என்றெழுதப்பட்டிருக்கவேண்டுமென்று அதன் உரைவரையுமிடத்துக் காட்டப்படும். இவ்வகையான வேறுபாடுகளை உற்றுநோக்கின் நியாயப்பிரவேசமும் மணிமேகலையும் ஒன்றினின்றொன்று தோன்றியதன்றென்று விளங்கும்.

மணிமேகலையுள் இதன் இலக்கணம் வருமாறு:—

'தன்மிச் சொரூப விபரீத சாதநந்
தன்மி யுடைய சொரூபமாத் திரத்தினை
யேதுத் தானே விபரீதப் படுத்தல்' (௨0௪ - ௨0௫)

என்பது.

இதன்பொருள்: 'தன்மிச்சொரூபவிபரீதசாதநத்தின் இலக்கணமாவது,—வாதிகூறும் துணிபொருளுக்குப் பற்றுக்கோடாயுள்ள தன்மியினுடையசொரூபமுழுவதையுமே அவன்கூறும் ஏதுவே

விபரீதப்படத்துணிதற்கு உரியதாயிருத்தல்' என்றவாறு. [இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இனி இதன் உதாரணம் வருமாறு:—

'பாவந் திரவியங் கன்ம மன்று
குணமு மன்றெத் திரவிய மாமெக்
குணகன் மத்துண் மையின்வே றுதலாற்
சாமா னியவிசே டம்போல்.........' (௩0எ—௩௧0)

என்பது.

இதனுள், 'பாவம் திரவியங் கன்ம மன்று, குணமுமன்று' என்றது பக்கவசனம். பாவம் தன்மி; திரவியகுணகன்மங்களன்மை சாத்தியதருமம். அன்று என்பதைத் திரவியத்துடனும் குணமும் என்ற உம்மையைத் திரவிய கன்மங்களுடனும் கூட்டி, பாவம் திரவியமுமன்று; கன்மமுமன்று; குணமுமன்று; என்று மேற்கோள்வாக்கியமாக்கிக்கொள்க.

இதன்பொருள்: பாவபதார்த்தத்தொகுதி, திரவிய குண கருமங்க ளன்று என்றவாறு.

இங்கு, பாவபதார்த்தம் என்றது திரவியம் குணம் கருமம் சாமாநியம் விசேடம் சமவாயம் என்னும் ஆறுவகையான உண்மைப் பொருள்களின் தொகுதியை.

'எத்திரவியமா மெக்குணகன்மத்துண்மையின் வேறுதலால்' என்றது ஏதுவசனம்.

இதன்பொருள்:—எல்லாத் திரவியங்களிலும் எல்லாக் குணங்களிலும் எல்லாக் கருமங்களிலும் உள்ள உண்மைத்தன்மையாகிய சாமானிய சாதியின் வேறுதலால் என்றவாறு.

'எத்திரவியமாம்' என்றதனை எத்திரவியத்துமாம் என அத்துச்சாரியையும் முற்றும்மையும் விரித்தும், 'எக்குணகன்மத்து' என்றதனை 'எக்குணகன்மத்தும் ஆம்' என அம்முற்றும்மையோடு ஆக்கச்சொற்கூட்டியும் பொருளுரைக்கப்பட்டது; எகரவினா ஈண்டு முற்றுப்பொருள்குறித்துநின்றது.



'சாமானியவிசேடம்போல்' என்றது திட்டாந்தவசனம். இதனுள்ளும், இனி இதன் விளக்கவுரையுள்ளும் உள்ள சாமானிய பதங்களிரண்டும் சமவாயபதங்களாயிருக்கவேண்டும். ஏனெனில் சாமானியத்தின் வேறுதலால் என்னும் பொருள்போதர முன்பு ஏதுவசனம் சொல்லப்பட்டது; மறித்தும் சாமானியபதார்த்தத்தையே திருஷ்டாந்தமாகக்காட்டினால், 'சாமானியத்தின் வேறுதலால், சாமானியம்போலும்' என்று பொருள் மாறுபடக்கூறுதலாய் முடியும்; சாமானியத்தின் வேறுதற்குச் சாமானியம் திட்டாந்தமாக மாட்டாது; வேறன்றாகியேயிருப்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும். ஆதலால் சாமானியத்தைத் திட்டாந்தங்காட்டல் பொருந்தாது.

அன்றியும், இவ்வேதுப்போலியை விளக்குமிடத்துப் பாவபதார்த்தத்துள், சாமானியவிசேடம்போக்கி, சமவாயபதார்த்தமொன்றிருக்கச்செய்தே 'பிறிதோன்றில்லாமையானும்' என்று கூறியதும் பொருந்தாதிருக்கிறது. அக்குற்றந்தீர்தற்கும் சாமானிய பதமிருக்குமிடத்தில் சமவாயபதமிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

அங்ஙனமிருந்தால் 'பாவந் திரவியங்கன்மமன்று, குணமுமன்று' என்ற பக்கவசனத்தால் திரவியகுணகன்மங்களும், 'எத்திரவியமா மெக்குணகன்மத்துண்மையின் வேறுதலால்' என்ற ஏதுவசனத்தால், சாமானியபதார்த்தமும் பாவபதார்த்தமல்லவென்று விலக்கப்பட்டவை நீங்க, பாவபதார்த்தத்துள் எஞ்சிநிற்பன சமவாயமும் விசேடமுமேயாதலால் அவையும் திருஷ்டாந்தமாகக் காட்டி விலக்கப்பட்டுவிட்டால் பாவபதார்த்தம் ஆறும் பாவபதார்த்தமல்லவென்று விலக்கப்பட்டனவாம்; ஆகவே, 'பாவபதார்த்தம்பிறிதொன்றில்லாமையானும்' என்றது பொருந்துகிறது.

ஆதலால், சாமானியவிசேடம்போக்கி என்றிருப்பதை, 'சமவாயவிசேடம்போக்கி' என்று திருத்திக்கொள்ளவேண்டியதாயிற்று.

நியாயப்பிரவேசத்தில், 'சாமாநியவிசேடம்போலும்' என்ற திருஷ்டாந்தவசனம் பிழைபட்டதாயில்லை; ஏனெனில் அதனுட் சொல்லப்பட்ட ஏது, மணிமேகலையிற் சொல்லிய சாமாந்யபதார்த்தத்தின் வேறுதலின்வேறுயுள்ளது; அது, 'ஏகத்திரவியமுடைமையால் குணகர்மங்களிலுமுண்மையால்' என்பது. ஆதலால், 'சாமாந்யவிசேடம்போல்' என்று திருஷ்டாந்தங்காட்டியது மாறுபடக்கூறலாகாது.

நியாயப்பிரவேச திட்டாந்தத்திற் சொல்லப்பட்ட விசேடபதார்த்தமும் இங்குச் சொல்லப்பட்ட விசேடபதார்த்தமும் ஒன்றல்ல; வேறுவேறுயுள்ளன. நியாயப்பிரவேசத்திலுள்ள சாமாநியவிசேடம் என்பது வேற்றுமைத்தொடராய்ச் சாமானியத்தின் உட்பிரிவான அபரஜாதியையுணர்த்துகிறது. மணிமேகலையிலுள்ள விசேடபதம் நித்தியத்திரவியவிருத்தியாயுள்ள ஐந்தாவது பாவபதார்த்தத்தையுணர்த்துகிறது. இங்ஙனம் வேறுபாடுகாட்டும் இதன் விளக்கவுரை வருமாறு:—

'.......................................என்றூற்
பொருளுங் குணமுங் கன்மமு மொன்றாய்
நின்றவற் றின்னிடை யுண்மைவே றுதலா
லென்றுகாட் டப்பட்ட வேதுமூன் றினுடை
* யுண்மை யேதுப் படுத்தும் பொதுவா
முண்மை சாத்தியத் தில்லா மையினுந்
திட்டாந் தத்திற் சாமாநிய விசேடம்
போக்கிப் பிறிதொன் றில்லாமை யானும்
பாவ மென்று பகர்ந்ததன் மியினை
யபாவ மாக்குத லான்விப ரீதம்' (நகo - நகக)

என்பது.

---

* இவ்வடி 'உண்மை வேறு படுத்துப் பொதுவாம்' என்றிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.



இதனுள் 'என்றூல்' என்றது இவ்வேதுப்போலியின் குற்றந் தோன்ற விளக்கிக்காட்டுதற்கு இதன் உதாரணத்தை அநுவதித்துக்கொண்டமைதோன்ற நின்றது.

'பொருளுங் குணமுங் கன்மமு மொன்றாய்நின்றவற்றின் னிடையுண்மை வேறுதலால் என்று காட்டப்பட்ட ஏது' என்றது இதன் உதாரணத்துள், 'ஏத்திரவியமா மெக்குணகன்மத்துண்மையின் வேறுதலால்' என்று காட்டப்பட்ட ஏது என்றவாறு. (இது வினைமுதல்.) 'பொருளுங் குணமுங் கன்மமு மொன்றாய் நின்றவை' என்றது: தொகுதியாகக்கூட்டிக்கொண்ட திரவியகுணகன்மங்களை.

அவற்றினிடையுண்மையாவது: அம்மூன்றனுள்ளும் பொதுவாய்நின்ற உண்மைத்தன்மையென்னும் பரசாமானிய சாதி பதார்த்தம்.

'மூன்றினுடையுண்மை யேதுப்படுத்தும்' என்றிருப்பது, பொருட்பொருத்தமில்லாமையாலும், சொன்முடிபில்லாமையாலும் அவையுண்டாமாறு 'மூன்றினுடையுண்மை வேறுபடுத்து' என (ஏது என்றிருப்பதை வேறு எனவும், படுத்தும் என்றிருப்பதை படுத்து என வினையெச்சமாகவும்) திருத்திக்கொள்ளவேண்டும். ஏது வேறுபடுத்து என இயையும்.

மூன்றினுடையுண்மை வேறுபடுத்தலாவது.—'பாவம் திரவியங்கன்மமன்று, குணமுமன்று' என்று முன்புசொல்லப்பட்ட தன் பக்கவசனத்தால் பாவபதார்த்தத்தொகுதி திரவியகுணகருமங்களாயுள்ளதன்று என்று காட்டியிருத்தல்.

பின்பு, 'திட்டாந்தத்தால் சமவாயவிசேடம்போக்கி' என்று சொல்லப்படுதலால், ஈண்டுத் தன்பக்கவசனத்தால் மூன்றினுடையுண்மை வேறுபடுத்து எனப் பொருள் கொள்ளத்தக்கதாயிற்று. 'மூன்று' என்றது திரவிய குண கருமங்களை.

இவ்வேதுப்போலியுதாரணத்துள் ஏதுவாசகமே பிரதானமாதலால் அதற்கு உறுப்பாயுள்ள பக்கவசனத்தோடு ஒற்றுமையுடைமையால் 'மூன்றினுடையுண்மை வேறுபடுத்து' என வேறுபடுத்தற்கு அது வினைமுதலாயிற்று.

வேறுபடுத்து அபாவமாக்குதலால் என இயையும்.

'பொதுவாமுண்மை சாத்தியத்தில்லாமையினும்'. என்றது, 'எத்திரவியமா மெக்குணகன்மத் துண்மையின் வேறுதலால்' என்று கூறிய ஏதுவசனத்தால், எல்லாத் திரவிய குணகன்மங்களிலும் பொதுவாயுள்ள உண்மைச்சாதியாகிய சாமானியபதார்த்தத்தின் வேறு பாவபதார்த்தம் என்று கூறிவிட்டமையால், அப்பொதுவாமுண்மை தர்மியாகிய பாவபதார்த்தத்தொகுதியுள் வாதிபுத்தியால் தனக்கில்லையாதலாலும் என்றவாறு.

தரும தருமிகளுக்கு ஒற்றுமையுடைமையால் தருமியாகிய பாவபதார்த்தம் சாத்தியமெனப்பட்டது. தருமமெனினுப் சாத்தியமெனினும் ஒக்கும்.

'திட்டாந்தத்திற் சாமானிய விசேடம்போக்கிப் பிறிதொன்றில்லாமையானும்' என்பதனுள், 'சாமானியவிசேடம்போக்கி' என்றிருப்பதும் சமவாய விசேடம்போக்கி' என்றிருக்கவேண்டும் என முன்னமே திருத்தப்பட்டது. பிறிதொன்றில்லையாமாறு போக்குதற்குரியவை இவையேயாதலானென்க. சமவாயவிசேடம் என்னும் உம்மைத்தொகை செய்யுளிடத்து முறைபிறழ்ந்துநின்றது.

திட்டாந்தத்தில் என்றது திட்டாந்தவசனத்தால் என்றவாறு இன் ஆன் ஏதுவாயிற்று.

'சமவாயவிசேடம்போக்கி' என்றது எஞ்சிநின்ற சமவாயபதார்த்தத்தையும், விசேடபதார்த்தத்தையும் பாவபதார்த்தமில்லையென் றொழித்தலால் என்றவாறு.



இவ்வேது, சமவாய விசேஷங்களைப் பாவபதார்த்தமில்லையென் றொழிக்குமாறு:—இங்கு, தர்மியாகச் சொல்லப்பட்டது பாவபதார்த்தத்தொகுதி. அதனின் வேறாகக்காட்டக்கடவது திருஷ்டாந்தமாதலால் அத்திட்டாந்தமாகக் காட்டப்பட்ட சமவாய விசேடங்களும், பாவபதார்த்தத்தொகுதியில்லையென்று கொள்ளக்கிடத்தல்.

'போக்கி' என்னும் வினையெச்சம் காரணப்பொருட்டாய்நின்று 'இல்லாமை' என்னும் பிறிதின்வினைகொண்டது. 'போக்கி' — போக்குதலால் என்றபடி.

'பிறிதொன்றில்லாமையானும்' என்றது தருமியாகக்கொள்ளற்குரிய பாவபதார்த்தம் வேறொன்றுமில்லாமையால்' என்றவாறு. அதாவது.—திரவியம் குணம் கருமம் சாமானியம் விசேடம் சமவாயம் என நியாயநூன்முடிபான பாவபதார்த்தங்கள் ஆறேயுள்ளன; அவற்றுள் முன்னையமூன்றும் பக்கவசனத்தால் பாவபதார்த்தம் அன்றென்று மறுக்கப்பட்டன. அடுத்து நான்காவதாயுள்ள சாமானியபதார்த்தமும் ஏதுவசனத்தால் பாவபதார்த்தமன்றென்று மறுக்கப்பட்டது. எஞ்சிநின்ற ஐந்தாவதும், ஆறாவதுமான பாவபதார்த்தங்கள் சமவாயமும் விசேடமுமே. அவையும் தன்மியின்வேறான பாவபதார்த்தமல்லாமைதோன்றத் திட்டாந்தமாகக் காட்டப்பட்டமையால், பாவபதார்த்தமில்லையென்றவாறாயிற்று; ஆகவே இவ்வறுவகைப்பொருளும் ஒழிந்தமையால் வேறுபாவபதார்த்தம் இல்லையென்பதாம்.

'பாவமென்று பகர்ந்ததன்மியினை அபாவமாக்குதலால் விபரீதம்' என்றது இவ்வேதுப்போலியுதாரணத்துள், தன்மியாகச் சொல்லப்பட்ட பாவபதார்த்தத்தை அறுவகைப் பாவபதார்த்தங்களினும் வேறென்று கூறுதலால் அவ்வறுவகைப் பாவபதார்த்தங்களினின்றும் வேறாயிருப்பது அபாவபதார்த்தமேயாதலால் அவ் வபாவமாகக்கொள்ளச்செய்தல் விபரீதமாம் என்றவாறு. ஆக்கம் விரித்து விபரீதமாம் என்க.

ஏது வேறுபடுத்து, போக்கி ஆக்குதலால் விபரீதமாம் என வினைமுடிவுசெய்க.

இங்ஙனங் கூறியவாற்றுல் இவ்வேதுப்போலிநிரூபணமுழுதுமே நியாயப்பிரவேசத்தினின்றும் வேறுபட்டமை காண்க.

### 4. தர்மிவிசேஷ விபரீதசாதனம்.

இனிச்சொல்லப்புகும் தர்மிவிசேஷவிபரீதசாதனத்துக்கு இரு நூலாசிரியரும் வேறுதாரணங்காட்டாமலே அவரவர் காட்டியுள்ள தர்மிஸ்வரூபவிபரீதசாதனங்களையே உதாரணமாகச்சொல்லி அத் தர்மியின் ஸ்வரூபம் கெடும்போதே அத்தர்மிவிசேடமும் கெடுதலால் அவையே தர்மிவிசேடவிபரீதசாதனமுமாம் என்று அறுதியிட்டுச்சென்றனர். இதற்குகாரணம் தனியே காட்டல் அரிது போலும்.

இதனை நியாயப்பிரவேசம் கூறுமாறு:—

𑌧𑌰𑍍𑌮𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑌾𑌧𑌨𑍋 𑌯𑌥𑌾?
𑌅𑌯𑌮𑍇𑌵 𑌹𑍇𑌤𑍁𑌰𑍍 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑍇
𑌅𑌸𑍍𑌯𑍈𑌵 𑌧𑌰𑍍𑌮𑌿𑌣𑍋 𑌯𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃
𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌮 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤
𑌮𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌸𑌾𑌧𑌯𑌤𑌿।
𑌉𑌭𑌯𑌤𑍍𑌰𑌾𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌾𑌤𑍍।

இதன்பொருள்: 'தர்மிவிசேஷவிபரீதசாதனம் எங்ஙனமெனில், இவ்வேதுவே, இங்குச் சொல்லப்பட்ட பூருவபக்ஷத்தினுள்ள தர்மியின் விசேஷம் யாதொன்றுண்டு உண்மைப் பொருளுணர்வையுண்டாக்குகை, அதன் மறுதலையான இன்மைப் பொருளுணர்வையுண்டாக்குகையையும் சாதிக்கிறது. இரண்டுபக்கத்தினும் பிறழ்ச்சியின்மையால்' என்பது.



'இவ்வேது' என்றது தர்மிஸ்வரூப விபரீதசாதனமாகச்சொல்லப்பட்ட 'ஏகத்திரவியமுடைமையாலும் குணகருமங்களினுண்மையாலும்' என்னும் ஏதுவை.

இதுவும் மணிமேகலையிற் சொல்லப்படும் ஏதுவின் வேறுயுள்ளது.

'இங்குச்சொல்லப்பட்ட பூருவபக்ஷம்' என்றது, முன்சொல்லப்பட்ட தர்மிஸ்வரூபவிபரீதசாதனத்தின் பக்ஷவசன திருஷ்டாந்த வசனங்களுடன்கூடின உதாரணத்தை.

'இரண்டுபக்கத்திலும்' என்றது வாதிகூற்றும், எதிரிகூற்றுமாகிய பூருவ உத்தர பக்ஷங்களை.

இனி, இது மணிமேகலையில் வருமாறு:—

'தன்மி விசேட விபரீத சாதனந்
தன்மி விசேட வபாவஞ்சா தித்தல்
முன்னங் காட்டப் பட்ட வேதுவே
பாவமா கின்றது கருத்தா வுடைய
கிரியையுங் குணமுமா மதனை விபரீத
மாக்கிய தாதலாற் றன்மி விசேடங்
கெடுத்தது....................' (கூ௨0 - கூ௨சு)

என்பது.

இதனுள், 'தன்மி விசேட விபரீத சாதனந் தன்மிவிசேட வபாவஞ்சாதித்தல்' என்றது இலக்கணம். [இது நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இதன்பொருள்: 'தன்மிவிசேடவிபரீதசாதனத்தின் இலக்கணமாவது வாதிகூறிய ஏதுவே அவனுல் துணியக்கருதிய தன்மியின்கணுள்ள விசேடமில்லையாமாறு துணிதற்குரியதாயிருத்தல்' என்றவாறு.

'முன்னங் காட்டப்பட்ட வேது' என்றது, முன்பு தன்மிச் சொரூபவிபரீதசாதன உதாரணத்துள், 'எத்திரவியமா மெக்குண

கன்மத்துண்மையின் வேறாதலால்' என்றதன் போந்தபொருளாய்ச் 'சாமானியத்தின் வேறாதலால்' என்று காட்டப்பட்ட ஏது என்றவாறு.

'பாவமாகின்றது' என்றது கிரியையும் குணமுமாம் என்ற குறிப்பால் பாவப்பொருளின் விசேடமாயுள்ளது என்னும் பொருள்படநின்றது. இது எழுவாயாய், கிரியையும் குணமுமாம் என்னும் பயனிலைகொண்டுமுடிந்துநின்று பின்பு 'அதனை' என விபரீதமாக்குதற்குச் செயப்படுபொருளாகச் சுட்டப்பட்டது. ஆகின்றது என்றது எழுவாய்ப்பொருள்தோன்றநிற்பதொரு சொல்லுருபு.

'கருத்தாவுடைய' என்றது துணியும் வாதிக்கு உடன்பாடாயுள்ள என்றபடி. துணிதற்கு வினைமுதலாதல்பற்றித் துணியும் வாதியைக் கருத்தா என்றார். இது வாதியின் அறிவின்மைபற்றி நகைச்சுவைதோன்றநின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

கிரியையும் குணமும் எதிரிக்கு உடைமையாக்கிக்கூறியது துணியுமவனுக்கு அநிஷ்டசித்தி தோன்றற்கென்க.

கிரியையும் குணமும் ஆம் அதனை யெனத் தொகுதியொருமையாற் சுட்டியவாறு.

அவற்றை விபரீதப்படுத்தலாவது அவை பாவவிசேடமன்று அபாவமாம் எனக் காட்டுதல். அதாவது:—தன்மிச்சொரூப விபரீதசாதனமாம்போதே, அத்தன்மியாகிய பாவபதார்த்தத் தொகுதியின் ஏகதேசமாய்த் தன்மிவிசேடமாயிருக்கும் கிரியையும் குணமுமாம் அவற்றையும் அகப்படுத்தி அபாவமாக்குதல்.

விபரீதம்—விருத்தம்; விருத்தவேதுப்போலியாமென்றபடி.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

உ

# திருவள்ளுவர்காலம்.

[அஅ-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

திருவள்ளுவமாலைச்செய்யுட்கள் பல, குறளை ஆரியமறைக்கு ஒப்பதும் மிக்கதுமாமென விசதமாகப் பாராட்டுவதை ஆதாரமாக்கித் திருக்குறளின் பழமையைச் சிலர் நிறுத்துவர். யாரும் இதை மறுக்கவில்லை. இதன்றி உக்கிரப்பெருவழுதியார் திருவள்ளுவமாலையில் "நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன், றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த" (4) என நான்முகனே திருவள்ளுவராகப் பிறந்து திருக்குறளையோதினாரெனக் கூறுகிறார். இதனால் நான்முகன் அவதாரமே திருவள்ளுவரென முடிவுசெய்து அதைச் சரித்திரஉண்மையாகக்கொள்வாருண்டோ? திருக்குறள் ஓரோவிடங்களில் வடமொழிமறையைப் பார்க்கிலும் பொருட்செறிவும் அழகும் உடையதாயிருப்பின், அதுவே பற்றாசாகத் திருக்குறள் வேதத்திற்குமுன்செய்யப்பட்டதென்றாவது, சமகாலத்திற் செய்யப்பட்டதென்றாவது, வேதமியற்றப்பட்டவுடனே ஆக்கப்பட்டதென்றாவது கொள்ளமுடியுமோ? வேதங்களுக்கு மிகப்பிந்திய மனுவாதி வடமொழிநூலொன்றுமே குறளுக்கு முதனூலாகாதென்ற குறிப்புத் திருவள்ளுவமாலையில் ஒருசெய்யுளிலும் காணப்படவில்லை. மனுவாதிநூல்கள் குறளுக்கு முதனூலாகாவிடின், மனுவாதிநூல்களைத்தழுவிய சார்புநூல் குறளுக்கு முதனூலாகக்கூடாது என்னும் விதியுண்டோ? எனவே இதுவும் வள்ளுவர்காலத்தை நிறுத்த ஆதாரமாகாமை நன்கு விளங்கும்.

திருக்குறள் அறநூலாமென்றும், அறநூல்களினின்றுமட்டுமே நீதிநூல்களின்கருத்துக்கள் பிரித்துத் தொகுக்கப்படுமேயன்றி, நீதிநூல்களினின்றும் அறநூல் இயற்றப்படுமாறில்லையென்றும் சிலர் கொள்வர். இது வடமொழிவழக்காயிருக்கலாம்.

அதே வடமொழிவழக்கைத் தமிழிலும் தழுவவேண்டுமென்பதில்லை. தனித்தமிழ்வழக்குகள் பல திருக்குறளிற் காணப்படுகின்றன. அவ்வாறே வடமொழிவழக்கைவிட்டுத் திருவள்ளுவர் நீதி நூல்களைத் தழுவி யெழுதியிருக்கமுடியாதென்று உறுதியாய்க் கூற இயலாது. மேலும், திருக்குறளை நீதிநூலல்ல; அறநூல்தான் எனக் கொள்ள என்ன ஆதாரமிருக்கிறது? நீதிநூல்களின்வேறாய அறநூல்கள் வடமொழியில் உண்டு என்பதைப் பரிமேலழகர் பல்லிடங்களிலும் சுட்டியுள்ளார் என்பது உண்மையே. ஆனால் திருக்குறளை அறநூல் என்று எங்கும் விதந்துகூறவில்லையே. பரிமேலழகர் உரைப்பாயிரத்தில் “அறம், ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும். அவற்றுள் ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவரាற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது” என்றும், பொருட்பாலின் ஆரம்பத்தில் “இனி இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள்கூறுவானெடுத்துக்கொண்டார். அது தன்றனைக் காரணமாய அரசநீதிகூறவே யடங்கும். அரசநீதியாவது காவலை நடாத்துமுறைமை. அதனை அரசியல் அங்கவியல் ஒழிபியலென மூவகைப்படுத்து.........கூறுகின்றார்” எனவும் எழுதுதலாலே, திருக்குறளை ஓரோவிடங்களிலோ முழுமையுமோ நீதிநூலென்றே பரிமேலழகர் கொண்டார் என்பது, வெள்ளிடைமலையாம். இப் பரிமேலழகர்கொண்டகருத்தை நோக்கின் “அறம்பாடிற்றேயாயிழை கணவ” என்ற புறப்பாட்டடியில் ‘அறம்’ என்பது திருக்குறள் ஒழிந்த வேறுநூலைச் சுட்டவேண்டும்; அல்லது பொதுவாகத் தர்மத்தைச் சுட்டவேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு. இதனால் திருக்குறளை ‘அறநூல்’ என உறுதியாய் யாரும் வழங்காததாலும், அவ்வாறு ஏனையோர் வழங்கினும் திருவள்ளுவர் ஆரியவழக்கிற்கு மாறாக நீதிநூல்களைத்தழுவி யெழுதக்கூடுமாதலாலும், பரிமேலழகரே பல்லிடங்களில் திருக்குறளைத் தக்கஆதாரத்துடன் நீதி நூலாகக் கருதுகின்றமையானும், இவர்கள் சொல்லுவதும் பொருந்துமாறில்லை.



பின்னும் ஒருசாரார், ஆரியதருமநூன்முறைக்கும் தமிழறநூன்மரபுக்கும் வேறுபாடுண்டென்றும், தமிழ்மரபுவழுவாது பொருள்களை மக்கள்வாழ்க்கைமுறைக்காமாறு எடுத்துக்கூறும் தமிழ்நூலே, திருக்குறளாம் என்றும், அதனால் அது காலத்தால் ஏனைய சங்கநூல்களுக்கு முற்பட்ட தமிழ்த் தனி முதலறநூலாம் எனவும் முடிவுகட்டுவர். தமிழ்மரபுகள்பல திருக்குறளிற் காணப்படுகின்றன. தனித்தமிழ் நாகரிகமும் பழக்கவழக்கங்களும் திருக்குறளிலுள்ளனவென்பது, தமிழறிஞர் பலருக்கும் கூறாமலே விளங்கும். இதனால்மட்டும் திருக்குறளை முதனூல் என்றும் பழமையானநூல் என்றும் கொள்வதற்கில்லை. வான்மீகத்தை முதனூலாகக் கொண்டெழுதப்பட்ட கம்பர்காவியத்திலே தனித்தமிழ் வழக்கங்கள் இல்லையா? தமிழ்நாட்டிலே நடந்தகதையைக் கூறும் முதனூலாகிய சிலப்பதிகாரத்தில் ஆரியரின் பழக்கவழக்கங்களும் ஆரியக்கதைவரலாறுகளும் ஆங்காங்கு அமையவில்லையா? இதைக் கொண்டு முதனூல் சார்புநூல் என்பதை எவ்வாறு அறுதியிட முடியும்? அதனினும் இதைக்கொண்டு காலத்தை எவ்வாறறியவியலும்?

குறளிற் காணப்படும் உழவு, கல்வி, கல்லாமை போன்ற சில அதிகாரங்களைக்கொண்டு, ஒருசாரார், திருக்குறள் மிகப் பழமையான தனித்தமிழ்நூல் என வாதிப்பர். மனுவாதிநூல்களில் மணம் நிகழ்வதற்குமுன்பே கற்கவேண்டுமென்றும், அதற்குப்பின் கல்வி கற்றல் இல்வாழ்வானுக்கு இல்லையென்றும் கூறப்பட்டிருப்பதாகவும், திருவள்ளுவர், தமிழ்முறைக்கேற்ப எந்நாளும் ஒருவன் கல்வி கற்கவேண்டுமெனக் கருதி அதைக் கல்வி, கல்லாமை, அறிவு, கேள்வி, சொல்வன்மை என்ற பல அதிகாரங்களாற் கூறினர் என்றும் கூறுவர். கல்வியைப்பற்றித் திருவள்ளுவர் பல அதிகாரங்களாற் கூறியிருப்பினும், இல்லறம் நடத்துங்காலத்தும் கற்றல் வேண்டுமெனக்கூறியதாகக் கொள்ளற்கிடமில்லை. அது அவர் கருத்தாயின் அவ்வாறே விசதமாகக்கூறியிருப்பர். மனுவாதியறநூல்களிலும் இல்லறம்நடத்தும்பொழுது, மனைவியைப்பிரிந்து போய், பல ஆண்டுகளாகக் கற்றல் இல்வாழ்வானுக்கில்லை யென்றனரேயன்றி, இல்வாழ்வான் கற்கவேகூடாது எனக் கூறவேயில்லை.

உழவுத்தொழிலை மனுவாதியநூல்களிற் பெரும்பான்மை நான்காவதுவருணத்தார்க்கும் சிறுபான்மை வணிகர்க்கும் உரியதாகக்கூறியிருக்க, திருவள்ளுவர் உழவுத்தொழிலை மிகவும் பெருமைப்படுத்தி அந்தணர்முதலிய நான்குவருணத்தார்க்குமுரியதாகக் கூறினர் என ஒருசாரார் கொள்வர். இதையே ஆதாரமாகக்காட்டி அவர்கள் திருக்குறளைத் தமிழிலக்கியத்திலே மிகப்பழமையான தனித்தமிழ்நூலென்று வாதிப்பர். அரசநீதியைக்கூறும் பொருட்பாலிற் குடிகளின் நலத்திற்கும், அரசனின் வருவாய்க்கும் இன்றியமையாதொழில் உழவேயாதலின் அதைத் திருவள்ளுவர் சிறப்பாகக்கூறினாரேயன்றி அந்தணர்க்கும் இத்தொழில் உரியதென்று ஒருவார்த்தைகூடச் சொல்லவில்லை. இவ்வதிகாரவுரையிற் பரிமேலழகரும் அவ்வாறு எழுதவில்லை. 'உழவு' என்பதற்குச் "சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதற்றொழில்" என்று உரை எழுதினரேயன்றிப் பாயிரத்திற்கூறியதுபோல நான்குவருணத்தார்க்கும் பொதுவென எழுதினாரில்லை. இதனால் இவர்கள்கூறும் கருத்து, பரிமேலழகர்க்கும் வேறெவர்க்கும் உடம்பாடன்று. வடமொழிநூல்களொடுமாறுபட்ட கருத்துக்கள் குறளிலிருப்பினும், அவை காலத்தைநிறுத்தத் துணைசெய்யாதபொழுது, தவறான சில ஊகங்களையேயாதாரமாகக்கொண்டு பொருந்தாக்கொள்கைகளை வெளியிடுவோர் அவர்களுக்குக் குறளிலுள்ள அன்பையும் மதிப்பையும் நன்குவெளிப்படுத்துவதன்றிச் சரிதவுண்மை துலக்குபவராகார்.

[தொடரும்.]

ஆர். நரசிம்ஹன், B.A. (Hons.)
தலைமைத்தமிழாசிரியர்,
நாஷனல்ஹைஸ்கூல்,
ரிஷிவேலி P. O
சித்தூர்ஜில்லா.

19

உ

# பாண்டியர் வரலாறு.

[௧௦௯-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## எட்டாம் அதிகாரம்.

### கி. பி. 1310-ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஆட்சிபுரிந்த பாண்டியர்.

மிகச் சீரியநிலையிலிருந்த பாண்டியராச்சியம், கி. பி. பதினான்காம்நூற்றாண்டின் முற்பகுதியில் தாழ்ந்தநிலையை அடையத்தொடங்கிற்று. மாறவர்மன் குலசேகரபாண்டியன்புதல்வர்கள் தம்முட் பகைகொண்டு போர்புரிந்துகொண்டிருந்தமையின் உள்நாட்டிற் குழப்பம் மிகுந்தது. அல்லாவுடீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் காபூர் என்பான் அதனையுணர்ந்து பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று, பலநகரங்களைக் கொள்ளையிட்டுப் பெரும்பொருள்திரட்டிச்சென்றனன்[1]. பாண்டிமன்னர்கள் தம் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளுதற்கேற்ற ஆற்றலின்றி அயலாரது படையெழுச்சியினால் அளவிலாத்துன்பத்திற் காளாகியிருந்தமை அன்னோர்க்குத் திறைசெலுத்திவந்த குறுநிலமன்னரும் கலகஞ்செய்து சுயேச்சை யடைதற்கு ஏதுவாயிற்று. ஆகவே, பதினான்காம்நூற்றாண்டிலிருந்தே பாண்டிவேந்தர்கள்பெருமையும் வீரமும் ஒருவாறு குறையத்தொடங்கின எனலாம்.

சடையவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் வீரபாண்டியன் ஆகிய இருவரும் மாறவர்மன் குலசேகரபாண்டியன் புதல்வர்கள் என்பதும், அவர்களுள் சடையவர்மன் சுந்தரபாண்டியன், தன் மாற்றாந்தாயின் மகனும் தன்னினும் இளைஞனுமாகிய வீரபாண்டியனுக்குத் தன்தந்தை நாடாட்சிநல்கினமைபற்றித் தந்தையை வெறுத்துக் கொலைபுரிந்து கி. பி. 1310-ஆம் ஆண்டின் இடையில் அரியணையேறினான் என்பதும் முன்னரே உணர்த்தப்பட்டன. மகமதிய ஆசிரியனாகிய 'வாசப்' என்பான் இச்செய்தியைக் கூறியுள்ளனன்[2]. ஆனால், கல்வெட்டுக்களால் இதனை உறுதிப்படுத்துவது

---

[1] See South India and Her Mahammadan Invaders by Dr. S. Krishnasamy Aiyangar.

[2] The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, page 202.

இதுபோது இயலாததொன்றாம். ஆயினும், மற்றொரு மகமதிய ஆசிரியனாகிய 'அமீர்குசுரு' என்பான், இளவரசர்களாகிய அவ்விருவரும் பெரும்பகைகொண்டு தமக்குள் போர்புரிந்துகொண்டிருந்தனர் என்று குறித்துள்ளமை அறிதற்குரியதாகும்[1]. எனினும், அவ்விருவேந்தர்களது ஆட்சியும் பாண்டிநாட்டில் நடைபெற்றிருத்தல்வேண்டும் என்பது அங்குப் பல ஊர்களிற் காணப்படும் அவர்கள் கல்வெட்டுக்களால் நன்கு புலப்படுகின்றது. சடையவர்மன் வீரபாண்டியன் கி. பி. 1342-ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்தனன் என்று சில கல்வெட்டுக்களால் தெரிகிறது. சடையவர்மன் சுந்தரபாண்டியன்கல்வெட்டுக்கள், அவன் கி. பி. 1319-முடிய அரசாண்டனன் என்று உணர்த்துகின்றன. அம்மன்னர் இருவரும் நிகழ்த்திய போரைப்பற்றிய செய்திகளையும் அதன்முடிவையும் தெளிவாக இந்நாளில் அறிதற்கியலவில்லை. அப்போரின்முடிவு எவ்வாறாயினும் அவ்விருவரும் பாண்டிநாட்டில் வெவ்வேறிடங்களில் இருந்து ஒரேகாலத்தில் ஆட்சிபுரிந்தனர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் ஆட்சிக்காலத்தில் அல்லாவுடீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர் தென்னாட்டின்மீது படையெடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாம். இது கி. பி. 1310-ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்ததென்று மகமதிய சரித்திர ஆசிரியனாகிய 'வாசப்' கூறியுள்ளான். இப்படையெழுச்சியைப்பற்றியசெய்திகளை 'அமீர்குசுரு' என்டவன் எழுதியுள்ள குறிப்புக்களால் ஒருவாறு உணரலாம்[2]. அந்நாளிற் பாண்டிநாடு மகமதியவீரர்களாற் கொள்ளையிடப்பெற்றமையின் அது தன்செல்வத்தையும் சிறப்பையும் இழந்து வறுமையெய்தியது; நாட்டில் அமைதியாக வாழ்ந்துவந்த மக்களெல்லோரும் தம் வாழ்நாளில் என்றும் கண்டறியாத பல்வகை இன்னல்களுக்குள்ளாயினர்; அறநிலையங்களும் கோயில்களும் அழிவுற்றன. சயாவுடீன் பார்னி என்ற மற்றொரு சரித்திராசிரியன், குலசேகரபாண்டியன்புதல்வரிருவருடைய செல்வங்களையும்

[1] The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, page 204

[2] See South India and Her Mahammadan Invaders by Dr. S Krishnasamy Aiyangar.



மாலிக்காபூர் கொள்ளையிட்டுக்கொண்டு வெற்றியுடன் டில்லிமாநகருக்குத் திரும்பிச்சென்றான் என்று குறித்துள்ளனன்[1]. இவற்றால், பாண்டிநாடு அந்நாளில் எத்தகைய துன்பநிலையில் இருந்தது என்பதை எளிதில் உணரலாம்.

பாண்டிமன்னர்நிலைமையினையும் உள்நாட்டில் நேர்ந்த குழப்பங்களையும் நன்குணர்ந்த சேரமன்னனாகிய இரவிவர்மன் குலசேகரன் என்பவன் பாண்டியராச்சியத்தின்மீது படையெடுத்துச் சென்று சிலபகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டனன். இவனது கல்வெட்டுக்கள் சோழமண்டலத்திலும் தொண்டைமண்டலத்திலும் சில ஊர்களிற் காணப்படுகின்றன[2]. அக்கல்வெட்டுக்களில் இவன் வீரபாண்டியனையும் சுந்தரபாண்டியனையும் வென்ற செய்தி குறிக்கப்பெற்றுளது. இந்நிலையில், பாண்டியராச்சியத்தில் நிலவிய குறுநிலமன்னர்களும் திறைமறுத்துத் தனியரசுபுரியத்தொடங்கினார்கள். அங்ஙனம் சுயேச்சையாகத் தம் நாட்டை ஆட்சிபுரியத் தொடங்கியவர்கள் தொண்டைமண்டலத்துப் படைவீட்டு இராச்சியத்துச் சம்புவராயர்களும்[3] பாண்டிநாட்டிலிருந்த வாணாதிராயர்களும் ஆவர். ஆகவே, குலசேகரபாண்டியனாட்சியில் மிகச் சிறந்தநிலையிலிருந்த பாண்டியராச்சியம் அவன் புதல்வர்கள் ஆளுகையிற் பலவகையிலும் தாழ்வுற்றமை உணரற்பாலது.

வீரபாண்டியன் தனது ஆட்சியின் பிற்பகுதியில் தலைநகராகிய மதுரையை மகமதியத்தலைவனான ஜலாலுடீன் அசன்ஷா என்பவனிடம் இழந்துவிட்டு வேறிடஞ்சென்றான். இத்தலைவன் டில்லிமாநகரிலிருந்த மகமது துக்ளாக் என்னும் அரசனால் தென்னாட்டிற்கு அனுப்பப்பட்டவன். இவன் பாண்டியஅரசனை வென்று அவனது நாட்டையும் கவர்ந்துகொண்டதோடு டில்லிமன்னன் பிரதிநிதியாக மதுரையிலிருந்து அரசாளவும் தொடங்கினான். சில நாட்களுக்குப் பின்னர், இவன் டில்லிவேந்தனுடையதொடர்பை முழுவதும் ஒழித்துவிட்டு மதுரையில் தனியரசுசெலுத்திவந்தான்.

[1] The Pandyan Kingdom by Mr. K. A Nilakanta Sastri, page 207.

[2] Annual Report on South Indian Epigraphy for 1926—27., part II, para 68.

[3] தமிழ்ப்பொழிலிரண்டாந்துணரில் (பக். 142-150) யானெழுதியுள்ள 'சம்புவராயமன்னர்' என்ற கட்டுரையால் இவர்கள் வரலாற்றை அறியலாம்.

பாண்டிநாட்டில் மகமதியரது ஆளுகை கி. பி. 1330 ஆம் ஆண்டிற் கணித்தாகத் தொடங்கி, கி. பி. 1377 வரையில் நடைபெற்றது. ஜலாலுடீனுக்குப்பிறகு அங்கு அரசாண்ட மகமதியத்தலைவர்கள் அல்லாவுடீன் உடயூஜி, குட்டப்உடீன் கியாத்துடீன், நாசருடீன், அடில்ஷா, பஃருடீன், முபரக்ஷா, அல்லாவுடீன் சிக்கந்தர்ஷா என்போர்[1]. இவர்களுள், சிலர் தம்பேரால் பொன்நாணயங்களும் வெளியிட்டுள்ளனர். இவர்கள் ஆளுகையைக்குறிக்கும் இரண்டுகல்வெட்டுக்கள் புதுக்கோட்டைராச்சியத்திலுள்ள இராங்கியம், பனையூர் என்ற ஊர்களில் உள்ளன. (Inscriptions of the Pudukkottai State Nos. 669 & 670.) இவர்கள் ஆண்டகாலங்களில் உள்நாட்டிற் கலகங்கள் மிகுந்திருந்தமையின் மக்களெல்லோரும் அல்லல் வாழ்க்கையுடையோராயிருந்தனர். (Do Ins. Nos. 454 & 669) அப்போது பல திருக்கோயில்கள் கொள்ளையிடப்பெற்று நாள்வழிபாடும் ஆண்டுவிழாவும் இன்றிப் பல ஆண்டுகள் மூடப்பட்டிருந்தன என்று சில கல்வெட்டுக்கள் கூறுகின்றன[2]. சமயக்கொள்கை பற்றிப் பொதுமக்கள் பல்வகைத்துன்பங்களுக்கும் ஆளாயினர் என்பது மகமதியசரித்திரஆசிரியனாகிய இபின் பாதூதா (Ibn Batuta) வின் குறிப்புக்களால் தெரிகிறது. (See South India and her Muhammadan Invaders.)

மகமதியரது ஆட்சிக்காலத்தில் பாண்டிநாட்டிற் சில பாண்டிய அரசர்களும் இருந்தனர். அவர்கள், மாறவர்மன் குலசேகர பாண்டியன் (1314—1346,) சடையவர்மன் பராக்கிரமபாண்டியன் (1315—1347), மாறவர்மன் வீரபாண்டியன் (1334—1380), மாறவர்மன் பராக்கிரமபாண்டியன் (1335—1352) என்போர். (The Pandyan Kingdom by Mr. K A. Nilakanta Sastri, pages

[1] See South India and her Mahammadan Invaders by Dr. S. Krishnasamy Aiyangar.

[2] Inscription No. 322 of 1927; Ins. Nos. 80 and 81 of 1927 (Annual Report on South Indian Epigraphy for 1926—27.)



246 & 247) அவர்கள் கல்வெட்டுக்கள் பாண்டிநாட்டிற் பல இடங்களிற் காணப்படுகின்றன. ஆனால், அந்நாட்டில் எவ்வெவ்வூர்களிலிருந்து எவ்வெப்பகுதிகளை அவர்கள் ஆண்டுவந்தனர் என்பது நன்கு புலப்படவில்லை. அவர்கள் மகமதியராளுகைக்கு அடங்கியிருந்தனர் என்பது ஒருதலை. எனினும், தம்நாட்டில் நடைபெற்று வந்த அயலாரது கொடிய ஆட்சியையும் அதனால் மக்கள் எய்திய எல்லையற்ற துன்பங்களையும் ஒழித்தற்கு அன்னோர் முயன்றும் இருக்கலாம். அம்முயற்சி பயன்படவில்லைபோலும். அத்தகைய முயற்சியில் ஈடுபட்டுழைத்த போசளமன்னனாகிய மூன்றாம் வீரவல்லாளதேவனும் ஊழ்வலியால் வெற்றிபெறாது போர்க்களத்தில் உயிர்துறந்தது அறியத்தக்கது[1].

இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற விசயநகரவேந்தனாகிய குமாரகம்பண்ணன் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு தமிழ்நாட்டிற்குவந்தான். அவன் படையெடுத்துவந்தது, மதுரைமாநகரில் நிலைபெற்றிருந்த மகமதியராட்சியை ஒழித்து மக்களையும் சமயங்களையும் பாதுகாத்தற்கேயாகும். குமாரகம்பண்ணனது தென்னாட்டுப் படையெழுச்சி கி. பி. 1364–ஆம் ஆண்டிற்கு அணித்தாக நிகழ்ந்ததென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்[2]. இப்படையெழுச்சியைக் குறிக்கும் கல்வெட்டுக்களும் தமிழ்நாட்டிற் சில ஊர்களில் உள்ளன. விசயநகரவேந்தனது படையெழுச்சியினால் தென்னாட்டில் மகதியர் ஆட்சி ஒருவாறு நிலைகுலைந்தது எனலாம். ஆயினும், அவர்களாட்சி கி. பி. 1377 வரையில் மிகத் தளர்ச்சியுற்றநிலையிலாதல் அங்கு நடைபெற்றிருத்தல்வேண்டும் என்பது அந்நாட்டிற் கிடைத்துள்ள சில மகமதிய நாணயங்களால் வெளியாகின்றது. மகமதியர்களை வென்ற விசயநகரமன்னன் பாண்டியர்களுள் எவ்வரசனிடத்தில் அந்நாட்டை ஒப்பித்துச்

[1] Mysore Gazetteer Vol. II, part II, page1405.

[2] The Pandyan Kingdom by Mr. K. A. Nilakanta Sastri, page 244.

சென்றான் என்பது புலப்படவில்லை. ஆயினும், அவன் பாண்டியர்க்கு உற்றுழி உதவுமாறும் அறநிலையங்களைப் பாதுகாத்துவருமாறும் சில தலைவர்களைப் பாண்டிநாட்டில் ஆங்காங்கு அமர்த்திச் சென்றனன். அத்தலைவர்களும் பாண்டியராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டு தாமே அரசாளவேண்டும் என்ற எண்ணத்துடன் காலங்கருதிக்கொண்டிருந்தனர். பதினான்காம்நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினைந்தாம்நூற்றாண்டிலும் பாண்டியஅரசர்கள் கல்வெட்டுக்கள் மதுரைஜில்லாவிற் காணப்படவில்லை; திருநெல்வேலிஜில்லாவில்மாத்திரம் அவர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. ஆகவே, பதினான்காம்நூற்றாண்டின்பிற்பகுதியில் அவர்கள் தம் தலைநகராகிய மதுரையையும் அதனைச் சூழ்ந்துள்ள நாட்டையும் இழந்து திருநெல்வேலிஜில்லாவிற்குச் சென்று தங்கியிருந்தனராதல் வேண்டும்.

இராமநாதபுரம்ஜில்லாவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் கி. பி. 1453-ஆம் ஆண்டில் வரையப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டு, 'மகாபலி வாணதரையர் சீர்மையான மதுரைமண்டலம்' என்று கூறுகின்றது. (Travancore Archaeological Series Vol. I, page 46) அன்றியும், பாண்டியராட்சிக்காலங்களில் அன்னோர்க்குத் திறைசெலுத்திவந்த குறுநிலமன்னர்களான மாவலிவாணாதிராயர்கள் தம்மை 'மதுராபுரிமகாநாயகன்' எனவும் 'பாண்டியகுலாந்தகன்' எனவும் கி. பி. 1483-ல் சிறப்பித்துக்கூறிக்கொண்டமை புதுக்கோட்டை இராச்சியத்தில் நெக்கோணம் என்ற ஊரிலுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது. (Inscriptions of The Pudukkottai State No. 672) இவற்றால் பதினைந்தாம்நூற்றாண்டில் மதுரையிலிருந்து அரசுசெலுத்தியவர்கள் வாணாதிராயர்கள் என்பது நன்கு வெளியாகின்றது. பாண்டியர்கள் மிகத் தளர்ச்சியெய்தியிருந்தநாட்களில் இவ்வாணாதிராயர்கள் அவர்களைப் போரில்வென்று அன்னோர் தலைநகராகிய மதுரையைக் கைப்பற்றிக்கொண்டதோடு அதனைச்சூழ்ந்துள்ள நாட்டைத் தாமே சுயேச்சையாக ஆட்சிபுரியவும் தொடங்கியிருத்தல்வேண்டும். இவர்கள் 'பாண்டியகுலாந்தகன்[1]' என்று

[1] Inscriptions of The Pudukkottai State No. 672.



தம்மைச் சிறப்பித்துக்கூறிக்கொள்வது ஒன்றே, பாண்டியரிடத்து இன்னோர்கொண்டிருந்த பெரும்பகைமையை நன்கு விளக்காநிற்கும். அன்றியும், புதுக்கோட்டைநாட்டில் குடுமியான்மலையிலுள்ள இரண்டுகல்வெட்டுக்கள், பாண்டியர்கள் வாணாதிராயர்களிடம் தோல்வியுற்று வேற்றிடம்சென்றனர் என்பதை வலியுறுத்துகின்றன[1]. மதுரைமாநகரினின்றும் நீங்கியபின்னர், அவர்கள் தென்பாண்டிநாட்டையடைந்து அங்கு அரசுசெலுத்திவந்தனர் என்பது பல கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது. அவர்கள் ஆளுகையும் அங்குப் பதினேழாம்நூற்றாண்டின் இறுதிவரையில் நடைபெற்றமை அறிந்துகொள்ளுதற்குரியதாகும்.

[தொடரும்.]

T. V. சதாசிவபண்டாரத்தார்,
தமிழ்ப்பண்டிதர், வாணாதுறைஹைஸ்கூல்,
கும்பகோணம்.

[1] மால்விட்ட படைதுரந்து வடுகெறிந்த மகதேசன் வடிவேல் வாங்கக்
கால்விட்ட கதிர்முடிமே விந்திரனைப் புடைத்ததுமுன் கடல்போய் வற்ற
வேல்விட்ட தொருதிறலு முகிலிட்ட தனிவிலங்கும் வெற்பி லேறச்
சேல்விட்ட பெருவலியு மாங்கேவிட் டு(?)நடந்தான் தென்னர் கோவே.

[Inscriptions of The Pudukkottai State No 653.]

இழைத்த படியிதுவோ வெங்களு வென்றென்
றழைத்த வழுகுரா லேயால்—தழைத்தகுடை
மன்னவர்கோன் வாணன் வடிவேலால் தோற்றுடைந்த
தென்னவர்கோன் போன திசை.

[Do. No. 678.]

# மலரி.

'மலரிவருங்கூத்தன்றன்வாக்கு' என்ற வெண்பாவின் ஈற்றடியிற் காணப்படும் மலரி என்ற சொல் ஓரூரைக்குறிக்கும் என்றும், அதுவே ஒட்டக்கூத்தருடைய பிறப்பகம் என்றும் கூறுவர் பெரியார். மகாவித்துவான் ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள், தமது சேதுநாடுந் தமிழும் என்ற நூலில் அந்த மலரி என்ற 'இவ்வூர் இச்சேதுநாட்டு ராஜசிங்கமங்கலசேகரத்துள்ளது' என்பர். [ஆயினும், மேலேகாட்டிய வெண்பாவினீற்றடியிற்காணப்படும் கூத்தர் ஒட்டக்கூத்தர்தாமோ என்பது ஆராய்தற்குரியது.]

இனி, திருஎறும்பியூர் என்ற திருவெறும்பூர்க்கல்வெட்டு ஒன்றில் மலரியான ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கலம் (136 of 1914) என்று காணப்படுகின்றது. இந்த ஸ்ரீகண்ட சதுர்வேதிமங்கலம் காவிரித் தென்கரைப் பாண்டிகுலாசினிவளநாட்டு மீகோழைநாட்டிலுள்ள தோரூர். (107 and 136 of 1914).

இஃதன்றி, புதுக்கோட்டைச்சீமையிலே குளத்தூர்த்தாலூகாவில் உள்ள குன்னாண்டார்கோவிற் கல்வெட்டொன்றில் 'கோனாடான கடலடையாதிலங்கைகொண்ட சோழவளநாட்டு வடகோனாட்டு பேராம்பூர் அரசு அடைக்கலங்காத்தானான நரசிங்கதேவரேன் கல்லுவெட்டிக்கொடுத்தபடி — என்காணியான கற்றலேரி பிடாகை மலரி பெருநான்கெல்லைக் குட்பட்ட நத்தம் நஞ்சை புஞ்சை குளத்திற் பாசிப்பாட்டமும் மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் மற்றும் எப்பேர்ப்பட்ட சுவந்திரமும் நாயினார்க்கு சந்திராதித்தவரை தேவதானமாகக் கொடுத்த அளவுக்கு' என்று காணப்படுவதுகொண்டு கற்றலேரி என்ற ஊரைச்சேர்ந்த பிடாகையொன்று மலரி என்ற பேருடையதாக விருந்தது என்று தெரியவருகிறது.

ஆகவே, 'மலரிவரும் கூத்தன்றன் வாக்கு' என்ற அடியிற் காணப்படும் மலரி என்ற ஊர், மேலேகாட்டிய மூன்று ஊர்களில் எதுவென்பது நிச்சயிக்கப்படல்வேண்டும்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை,

**திரு. சோமசுந்தரதேசிகன்.**

---

குன்னூர்ப் பெரியவீட்டுக்

# குமாரசுவாமிமுதலியார்

## 1850—1935

சங்கீத சாகித்திய ரசிகசிகாமணியாகிய இவர், மண்ணுலகப்புல
க்குத் துட்டியும், விண்ணுலகப் புலவர்க்குச் சந்துட்டியும் உண்
கச் சென்றவருடமுடிவில், 31. 12. 1935-ல், தமது 86-ஆம்
ண்டுமுடியுமுன் ஆயுள்முடிவுற்றார். இவர், மதுரைத்தமிழ்ச்சங்க
ங்கத்தினராகவும் வித்துவானாகவும் கவிஞராகவும் விளங்கினார்.

இவர், நவாபு ராசாங்கத்தில், பல தலைமுறைகளாகத் தொடுத்
த் தென்சீமையதிகாரம்செலுத்திப் பேரும்பிரசித்தியும் பெற்ற
ாவாய்குடும்பத்தில் ஆழ்வார்குறிச்சித் தளவாய் குமாரசுவாமி
தலியாரின்சகோதரிகுமாரரான பாண்டியமுதலியாரென்ற பழனி
பமுதலியாருடைய புதல்வர் மூவருள் முதல்வராவர். எனக்கு
மத்துனமுறையினர்; இராமநாதபுரம் சில்லா, சிவில்லிபுத்தூர்த்
லூகா குன்னூரில் மிராசுதாராகவும் சாவ்காராகவும் வாழ்ந்தவர்.

யான் அறிந்தவரை, இப்போது சீவந்தராகவுள்ள வித்துவான்க
ள் இவரே * மூப்பர்முதல்வராயிருந்தவர். இவரோடு பழகிய
த்துவான்கள் மிகப்பலர். அவருள் அதிக நெருக்கமான பழக்க
டையவருட் சிறந்த ஒருவர் இவருக்கு அடுத்த முதியபுலவரும்
ல பல பெருநூல்களியற்றியவரும் மதுரையில் வாழ்பவருமான
. ரா. அருணசலக் கவிராயர். ஏனையோர் பலர், நெடுங்காலத்
க்குமுன்னரே, இவ்வுலகவாழ்வை நீத்தனர். அவர்கள், மது
ரத்தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகர் மு. ரா. சுப்பிரமணியக்கவி
யர், அரிமழுத்தலபுராணம் குமணசரித முதலிய நூலாசிரியரான
. ரா. கந்தசாமிக்கவிராயர், வித்துவப்பிரபுவான கவிராச நெல்லை
பபிள்ளை, காந்திமதியம்மைபிள்ளைத்தமிழ், இராசவல்லிபுரம்
த்துசாமிபிள்ளைகாதல் முதலிய பிரபந்தங்களும் சிறந்த பத
கீத்தியங்களும் செய்த அழகியசொக்கநாதபிள்ளை, குவலயா
ந்த மொழிபெயர்ப்பு ஒருதுறைக்கோவை முதலியவைகளை இயற்
ப எட்டயபுரம் சமஸ்தானவித்துவான் மு. க. மீனாட்சிசுந்தரம்
ள்ளை, வீரைப்பிள்ளைத்தமிழ் வீரையமகவந்தாதி உலகெலாங்

* Doyen.

கொண்டாடும் காவடிச்சிந்து முதலியவற்றின் ஆக்கியோரான சின்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் முதலியோராவர்.

இவருடைய நண்பருட் சிறந்தவர் வித்துவான்களை ஆதரித்துத் தமிழறியும்பெருமாளெனத் திருநெல்வேலியில்வாழ்ந்த இராசவல்லிபுரம் முத்துசாமிபிள்ளை. இந்த வள்ளலிடம் மேற்கூறிய வித்துவான்களும் வேறுபல வித்துவான்களும் இடையிடையே வந்து, துதிகவிகள்சொல்லி, அவ்வப்போது பலநாள்கள் திருநெல்வேலியிலே தங்கி, அளவளாவியிருந்து பரிசுபெற்றுப் போவர். திருநெல்வேலிக்கு அடுத்தடுத்துவந்து நெடுங்காலந்தங்கிவந்த இவரும் அந்நகரிலேயே வசித்துவந்த கவிராய நெல்லையப்பபிள்ளையும் முத்துசாமிபிள்ளையும் யானும் ஆகிய நால்வரும் அவ்வித்துவான்கள் புதியனபுதியனவாகப் பாடிவரும் பாட்டுக்களைக் கேட்டும் அவர்களுடன் சல்லாபித்தும் இனிது பொழுதுபோக்கிய நாள்கள் எண்ணிறந்தன.

இவர், தம்மை எல்லா வித்துவான்களும் தம் தம் உயிர்நண்பரென்று கருதும்படி அவர்கள் திறத்தில், உள்ளும் புறமும் ஒத்த பேரன்பு பாராட்டிவந்ததைப் பல சமயங்களிற் பார்த்திருக்கின்றேன். சங்கீத சாகித்திய இன்பங்களை இவர்போல அனுபவித்தவரை யான் அறியேன்.

இவர் யாதொரு நூலும் இயற்றவில்லையெனினும், இவர் பாடிய பாட்டுக்கள் எண்ணிறந்தன. அவையெல்லாம் நிருபகவிகளும் சிறப்புப்பாயிரக்கவிகளுமாம்.

இவர் எனக்கு அனுப்பிய ஒரு நிருபத்திலுள்ள கவிகள்:

பந்தரங்க முலைவிழிஐம் பாலெனக்கொள்
குறவள்ளி பங்க ரெப்போ
துந்தரங்கம் வீசுகடற் றுனியடங்கத்
தமிழ்முழங்குந் தூய செந்திற்
கந்தரங்க மதிற்பூதி கலவையென
வணிபவற்குங் கடவுள் வேதத்
தந்தரங்க முபதேசித் தருள்குமர
குருபரன்ற னருளி னாலே.

[பந்து அரம் கம் (-மேகம்). அணி பவன்—அணிகின்ற சிவன். கடவுள் வேதம்—தெய்வத்தன்மையுடைய வேதம்.]



இவ்வியன்றங் கியவுலகி லேவரும்வந்
தடிபணியி ராச வாழ்வும்
திவ்வியகு ணாகரஞ் சிதஞ்சிறந்தன்
பறிவறிந்த சிறுரு மென்றும்
அவ்வியமி லாதவர்பே ராக்கம்போல்
வளர்ந்திடுதீர்க் காயு ளுஞ்சீர்
எவ்வியலு மேன்மேலு மிணையின்றிப்
பெருகிவளர்ந் திடுக மாதோ.

இவர் யான் இயற்றிய அகலிகைவெண்பாவுக்கு அளித்த சிறப்புப்பாயிரம்.

ககனமளாஞ் சோலைவெள்ளக் காலூரன் மேலோர்
புகழ்சுப் பிரமணிய பூபன்—அகலிகை
வெண்பா வமுதை விருந்தாப் புலவர்குழாம்
உண்பான் அளித்தான் உவந்து.

இவர் இசையுடனே தாம் பாடும் பாட்டுக்களின் பொருளையும் இனிய சுவையுள்ள பகுதிகளையும் தாம் உணர்ந்து இன்புறுதல்போலக் கேட்போரும் உணர்ந் தின்புறும்படி பாடும் இயல்பினராதலால், இவர் பாடக் கேட்போர் ஏககாலத்தில் சங்கீத சாகித்திய இன்பங்களிரண்டையும், தேனையும் பாலையும் ஒன்று சேர்த்துண்பார்போல, ஒருசேர நுகர்வார்கள்.

இவர், 1878-ம் வருடத்தில், சென்னையில் ஆங்கிலக் கல்வி பயின்றுகொண்டிருந்த என்னுடன் வதியும்படி ஒரு சமயம் வாய்த்திருந்தது. அப்போது, நான், இவரைச் சூளையில் வசித்த துபாஷ் சிங்காரவேலுமுதலியார் பங்களாவில் வித்துவான் புரசை அட்டாவதானம் சபாபதிமுதலியார், இசையோடு பாமர பண்டித ரஞ்சகமாகத் திருவிளையாடற்புராணம் பிரசங்கஞ்செய்வதைக்கேட்கக் கூட்டிப்போயிருந்தேன். பிரசங்கம் முடிந்தபின் இவரை அந்தப் பிரபுவுக்கும் வித்துவானுக்கும் அறிமுகஞ்செய்வித்து, இவர் தேர்ந்த வித்துவானென்றும் சிறந்த * காயகரென்றும் தெரிவித்தேன். அவர்கள் இவரைப் பாடும்படிவிரும்ப, இவர் மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதியில் ஒரு பாட்டைப் பாடினர். கேட்ட

* காயகர் - பாடுவோர்.

இருவரும், கழிபெருங்களிகூர்ந்து காலதாமதமாவதைக் கவனியாமல் மேலும் மேலும் பாடும்படிவேண்ட, அந்நூலிற் பெரும்பகுதி பாடப்பெற்றது. அப்போது, அவர்கள், அந்நூலின் பிரதியை வாங்கி அனுப்பும்படி இவரை வேண்டிக்கொண்டனர். இவர் சீவில்லிபுத்தூரில் ஆடித்திருவிழாக்காலத்தில் ஏற்படும் புத்தகக் கடைவீதியில் வாங்கி அனுப்புவதாகச் சொன்னார். ஆடி கழிந்தும் புத்தகம் வாராமையால், அவர்கள் அதைப்பற்றி இவருக்கு நினைப்பூட்டும்படி என்னிடம் சொன்னார்கள். அப்போது நான் இவருக்கு எழுதியனுப்பிய கவி வருமாறு:—

மருமதுர நறவுமிழ்கொன் றைச்சடையார்க்
கவரடியார் மனத்தை யேறி
கருமதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி
நன்னூல்சிங் கார வேலாம்
தருமதுரைக் கங்காடி விழவதனி
லங்காடி தன்னில் வாங்கி
வருமதுரை யெனவுரைத்த வாசகத்தை
மறந்தனையோ மதிவல் லோனே.

(அங்காடி - கடைவீதி. வரும்; அது உரை)

மற்றொருசமயத்தில், நான் மிருகவயித்திய இலாகா உத்தியோகத்தனாகச் சாத்தூர்த்தாலுகா முத்துலாபுரத்து வருடாந்தர மாட்டுச்சந்தை மேற்பார்வைசெய்துகொண்டிருந்தபோது, மதுரைக்குப் போயிருந்த இவர், தாம் தம் ஊர்க்குத் திரும்பிப்போகும் வழியில் சாத்தூரில் இறங்கி, முத்துலாபுரத்துக்கு வந்து என்னைப் பார்ப்பதாக எழுதியிருந்தார். அந்தப்படி வரவில்லை. அக்காலத்தில் சாத்தூர்த்தாலுகாத் தாசில்தாராகவிருந்த முருகேசபிள்ளை, முத்துலாபுரத்துக்கு வந்தவர், என்னைக் கண்டபோது, இவர் சாத்தூரில் இருப்புப்பாதைநிலையத்தில்(Rail station) தம்மைப்பார்த்தாரென்றும், முத்துலாபுரத்தில், காலரா நடப்பதாகக் கேள்வியுற்றதனால் அவ்வூர்க்கு வருவதாகஇருந்ததை நிறுத்தி நேரே தம் ஊருக்குப்போவதாகச் சொன்னாரென்றும் தெரிவித்தார். அப்போது, 15—7—1895-ல் நான் இவருக்கெழுதியனுப்பிய இதனடியிலுள்ள கவிகளோடு இவர் வரலாற்றை முடிக்கின்றேன்.



தம்பதி யொரீஇப்பஃ றலமுங் காண்பான்
தேசாந் தரிகளாத் திரியுங் காலம்
மகேசுரன் மாதவன் மலரோ னிந்திரன்
குபேரன் முதலாக் கூறுந் தேவர்
எப்பதி யணுகி னிதுதத் தம்பதி
யென்ன மருளுவ ரன்ன தாகிய
கொழுவளக் குன்னூ ருறையுமென் னுள்ளத்
தலமும்வாழ் குமார சாமீ! தமியேன்
அஞ்சலி யத்தனா யறைவது கேண்மதி:
இருதொள் ளாயிரந் தலைப்பெய் தியைந்த
ஒருதொண் ணூற்றைந் துற்ற வருடம்
சூலையா மதியிற் றுன்னிய பத்தெனும்
தேதியிற் சிறியேன் றெரிசனஞ் செய்யக்
குருமுத் துலாநகைக் கோற்றொடி மாதர்சூழ்
தருமுத் துலாபுரத் தலத்தில் வருதுமென்
றன்பொடு வரைந்துநீ யனுப்பிய நிருபம்
கண்டன னதுநினைக் கண்டதே யாமெனக்
கொண்டன னதுநீ குறிப்பி னுணர்ந்திவண்
வருவது மிகையென வாரா திருந்தனை
யென்றியா னிருந்தே னிருந்த காலை
மாசிலா மதிகா மருமுக மானான்
தாசிலா மதிகா ரஞ்செய் தயாநிதி
முருகேச னாக வருகேச வன்புகல்
முருகே சமானமா மொழியா லுணர்ந்தனன்
நீவரா மைக்கு நிமித்தமஃ தென்னெனில்,
ஏககா லத்திலிஃ தெண்ணிலா ரைக்கொல்பல்
காலரா வுற்றதென் றியாவருங் கழறலாற்
'காலரா' வெனும்பெயர் கழுமிய தொற்றுநோய்
இப்பி ராந்தத் திடையுள தெனும்பொய்
வதந்தி யுன்றன் னார்செவி யுற்றதே.

முழுவ ராப்பல வணிமுழு முதற்கன்புற் றுங்கீ
குழுவ ராவன்றெ ராவன்று குவ்விற்கா லராவா
மொழிவ தும்மன்று மற்றதன் பெயரினுன் முழங்கும்
பழிவ தந்தியே தடுக்கவந் திலையிது பண்போ.

உணுது றங்கிய வொருத்தனை யெழுப்பியுண் டிலையே
அணுவருந்துபாலமுதென் றுபின்னின்றெனபதுபோன்ம்
எணுதெற்பார்ப்பலென்றெழுதிப்பாரத்திடாமலேகினமை
குணுக ரத்திருக் குமாரசா மிப்பெருங் கோவே.

பருவ மாமழை வருகுறி பலபல காட்ட
வருகை நோக்கியோ கையினுறு மயிற்குழாம் பின்னர்க்
கருமு கிற்கணம் வராமையா லேங்குவ கடுப்பத்
தரும வென்னுளங் கவற்றினை நினக்கிது தகவோ.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.
26—1—36.

---

துன்னூர்ப் பெரியவீட்டு ஸ்ரீமாந்.
குமாரசுவாமி முதலியாரவர்கள்
தேகவியோகமடைந்ததைக்குறித்து
சேற்றூர்ச்சமஸ்தானவித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவானுமாகிய
மூ. ரா. அருணுசலக்கவிராயரவர்கள் இயற்றிய

## சரமகவிகள்.

வில்லிநகர்ப் பக்கத்துக் குன்னூர்வாழ்
குமாரசுவா மிக்கோ மானே
நல்லியலாம் ஆசாரம் ஒழுக்கமுப
சாரமன்பு நலமெல் லார்க்கும்
சொல்லியருட் குணம்படைத்தில் லறம்புரிந்து
நாடோறுந் துணையாங் கல்வி
மெல்லியநுண் ணறிவடைந்து பிறர்புகழ
வீற்றிருந்த மேலோன் நீயே. (1)



கேட்டவர்தம் உளமகிழச் சங்கீத
ஞானத்தின் கிளர்ச்சி பொங்கப்
பாட்டவள வும்படித்துப் பொருள்சொல்லி
வசப்படுத்தும் பான்மை பெற்றாய்
கூட்டமிடும் உயர்புலவர் நடுவிருந்து
முதற்பேசுங் குணமும் பெற்றாய்
வாட்டமறு மின்சொல்லால் யாவரன்பும்
வரவழைத்து வாழ்ந்த நீயே. (2)

தனையடைந்தார் வறுமைதவிர்ந் திடவேண்டும்
பொருளுதவி தானுஞ் செய்து
நினைவிலெழு பிறர்தமையுஞ் செயச்சொல்லி
யறமவர்பால் நிகழச் செய்தாய்
உனையனையார் ஒருவரையெங் கணுமோடி
மிகத்தேடி யுங்கா ணுமே
அனையநீ யெமைப்பிரிந்தா லெவ்வாறு
சகித்திருப்போம் அந்தோ! அந்தோ!! (3)

பிள்ளைகள்மூ வரினுலக நாதமால்
பெறவருநின் பேரப் பிள்ளை
தள்ளரிய குணங்களெலாஞ் சொல்லிமகிழ்ந்
தவன்றனே தக்கோ னென்று
வள்ளலாம் நின்பேர்வைத் ததுமறந்து
வானடைந்து மறைந்து கொண்டாய்
கள்ளமிலா துரைத்தனையே லாங்குவந்துன்
றிருமுகத்தைக் காண்பல் யானே. (4)

ஓங்கியநட் புறும்நெல்லை நெல்லையப்பன்
கவிராசன் உண்மை யான
பாங்கியலீ சுரமூர்த்திக் கவிராச
னுன்மரணம் பயக்குந் துன்பம்
தாங்கியிருந் திடமுடியா தென்றுன்முன்
னிறந்தனரத் தன்மை கண்டும்
ஈங்கியா னும்மிறவா திருந்ததுநின்
மரணங்கேட் டிடைதற் கேயோ. (5)

உன்போலும் பிரபுவாய் மைந்தனக்கேண்
மைச்சிறப்பால் உன்னைப் பாடும்
அன்போவா வெள்ளக்கால் வாழ்தருசுப்
பிரமணிய அரசை யும்பூம்
பொன்போகா மார்புறநின் புத்திரர்க
ளிருவரையும் புறக்க ணித்தே
நன்போத முடையநீ விண்புகுந்து
தனியிருந்த நலமென் னேயோ. (6)

அதிகநட்பால் தன்னுயிர்போ லுன்னையெண்ணி
அன்பினால் அகத்துள் வைத்த
மதிமிகுந்த சிவகாசி வாழ்வேலா
யுதவேளை மறந்த தன்றித்
துதிபெறுநின் உடல்தனையும் மறந்திறந்து
வானடைந்த சூழ்ச்சி கண்டும்
விதிவசமீ தென்றெண்ணி உன்னையவன்
மறந்திலான் மெய்யா மீதே. (7)

*இந்தவுட லோடுநீ திரும்பிவரு
மூர்க்கேகி வினைய துன்பம்
வந்தமரா மாட்டாதே ஒருபொழுதுந்
திரும்பிவரா வானோ ரூர்க்கு
முந்தநீ சென்றதனால் விசாரசா
கரத்திலே மூழ்கி னோம்யாம்
எந்தவித மானாலும் மரணமன்றி
யிதற்குமருந் தில்லை அந்தோ! (8)

வேறு.

மன்னும் யுவவருடம் மார்கழியீ ரெட்டாநாள்
தன்னிலுறும் முற்பக்கச் சத்தமியில்—குன்னூர்
வருபெரிய வீட்டுக்கு மாரசுவாமி
அருளுஞ் சிவனடிசேர்ந் தான்.

---

* இந்தவுடல் - பூதவுடம்பு.



தலைவி தன்றுணைக்கு உணர்த்தல்.

209. வாரார் முலையுமை பாகன் சிராமலை மானனையாய்
காரார் தருபுய லென்ன மகிழ்ந்து கவினார்புகழ்
நேரார் தருமன்பர் வந்த தெமக்கு நிகழ்த்தவிங்குச்
சீரார் தருபுலி மேல்யானை வாழ்ந்திடச் செய்தனரே. (௬)

தலைமகள் அவலம் பாங்கி தணிவித்தல்.

210. தேவா திபர்தொழு மெம்மான் சிராமலைத் தேமொழிகைம்
மாவாதி வென்றவர் பொய்யார் குறிமொழி வாடலைநீ
காவாதி யாய்முத லில்லாத வாவிக் கடிமலர்த்தார்
பாவாதி யாய்முத லில்லா வெதிரி படைத்ததுவே (௭)

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.

211. கருவா யுருதெமைக் காப்போன் சிராமலைக் காவிடையெம்
பெருவாழ் வனவன்ப ரேயல்லி னுங்குறி பேணியிங்ஙன்
ஒருவா வவாவொடும் வந்தேமுன் கண்டில மும்மைவர
வருவா முமதூர்க் கினியா முரையீர் வழியெமக்கே. (௮)

---

209. கார் - கருமை. வந்தது - தாம் வந்ததை. புலி - வேங்கையென்னும் மிருகம், வேங்கைமரம். யானை - ஒரு மிருகம், ஆம்பல். வேங்கைமரத்தின்மேல் ஆம்பற்பூவை வைத்துச் சென்றனரென்பது கருத்து.

210. தேமொழி : அண்மைவிளி. கைம்மா ஆதி - யானை முதலியவற்றை. குறிமொழி பொய்யார். நீ வாடலை. கா என்பதை ஆதியாகக்கொண்டு முதலில்லாத வாவிமலர்த்தார் - காவி மலர்மாலையை. பா ஆதியாய் முதலில்லா வெதிரி - பாதிரி. பாதிரிமரமானது காவிமலர்மாலையைப் பெற்றிருக்கின்றது. தலைவியை அணிதற்குத் தான் கொணர்ந்த கருங்குவளைமாலையை அவள் அங்கு இல்லாமையால் அங்கு நின்ற பாதிரிமரத்தின் மேலே தலைவன் போட்டுவிட்டுச் சென்றான்.

211. கரு - பிறவி. வாழ்வு அன்ன - வாழ்வையொத்த. அல்லில் - இருளில். அவாவொடும் - ஆசையோடும். உம்மை வரக் கண்டிலம். வழியை உரையீர்.

### இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றல்.

212. அறந்தா னுகைத்திடு மெம்மான் சிராமலை யார்முகில்போல்
புறந்தாழ் குழலி யெனைமறந் தாலும் புனையிழையாய்
மறந்தா லெனதுயிர் வாழா துடலிடை வாழ்தலினேர்
சிறந்தா டனையென்றும் யான்மற வாமை தெரிந்துகொள்ளே.

### தலைவி குறிமருண்டமை தலைவற் குணர்த்தல்.

213. சோலையின் மீதன்னம் பேடையைத் தேடிச் சுழன்றரற்றும்
வேலையி னோரொலி கேட்டுன் குறியென மென்றளப
மாலையி னான்பணி யெம்மான் சிராமலை மான்மருண்டற்
காலையி னேகியு மீண்டும் வருந்தினள் காவலனே. (௧௦)

### அவன் மொழிக் கொடுமை சென்று அவள் அவட் கியம்பல்.

214. சேலாய்த் திகழும் விழியுமை பாகர் சிராமலையில்
நூலாய்த் துவண்டு நுணுகிடை யாய்பத நோவவல்லில்
மாலாய்க் கனிக ளுகுத்துக் குருகினம் வாயரற்ற
மேலாய்த் தருவை யசைத்தோமென் றாரிங்கு வேந்தர்வந்தே.

### என் பிழைப் பன்றென்று இறைவி நோதல்.

215. அற்பா லுமைதொழ வானந்த மாநட மாடிமன்றுள்
பொற்பார் தரமன்னு மெம்மான் சிராமலைப் பூம்பொழில்வாய்க்
கற்பா ருகுசெங் கனித்தொனி கேட்டெங் கணவர்வந்து
நிற்பா ரெனவெய்தி நேடினன் கண்டில னேரிழையே. (௧௨)

---

212. அறம் - தருமமாகிய இடபத்தை. தான்: அசைநிலை. ஆர்ந்த முகில். குழலி - தலைவி. மறந்தால் - யான் மறந்தால். உடலிடைஎனதுயிர் வாழாது. வாழ்தலின் - என்னுடைய உடலில் உயிர்வாழ்ந்திருத்தலால்.

213. அன்னம் - அன்னப் பறவை. வேலையின் - காலத்தில். சிராமலைமான் - தலைவி. அல் காலையின் - இருட்காலத்தில்.

214. அல்லில் - இருளில். மாலாய் - மயக்கமுடையவளாகி, திருமாலாகி. குருகு - பறவை, சங்கு; "குருகை விடுத்தா ளெனக்குருகே கூறாய்" (காசிக். 92.) தரு - மரம், கற்பகம். பின் இரண்டடியும் திருமாலுக்கும் தலைவனுக்கும் சிலேடை.

215. அற்பால் - அன்பினால். ஆனந்த மாநடம் - பரமானந்த தாண்டவத்தை. கற்பார் - கல்லையுடைய பூமியில். தொனி - ஒலி.



### தாய் துஞ்சாமை.

216. உன்னா ருளங்களின் மன்னார் சிராமலை யொண்ணுதலாய்
என்னா ருயிரனை யார்வந்தும் யாமவ ணெய்தலின்றி
இந்நா ளலமந் திரங்கச்செய் தீவினை யின்பயனாத்
துன்னா ரெனவனை யிந்நா ளிரவினுந் துஞ்சிலளே. (௧௩)

### நாய் துஞ்சாமை.

217. நீரார் சடைமுடி யெம்மான் சிராமலை நேரிழையாய்
தாரார் துணைப்புயத் தன்பர்நம் மூசலிற் றாஞ்சுழலப்
போரா ரனைதுஞ் சினுந்துயி லாது பொருகடல்போல்
கூரா ரிருளினி லோயாமன் ஞாளி குரைக்கின்றதே. (௧௪)

### ஊர் துஞ்சாமை.

218. கற்றார் கவிகள் புனையுமெண் டோளினர் கந்தர்தமைப்
பெற்றார் சிராமலை நங்காய்நம் மன்பர்ப் பெருமையினால்
பற்றார் விரக வழலெங்கு மாகிப் படர்ந்ததுவோ
உற்றா ரொடுநம தூரார் துயிலற் றழல்வதற்கே. (௧௫)

### காவலர் கடுகுதல்.

219. பொடிப்பா ருடலிரு மாமுனி வோரன்று போற்றமன்றுள்
நடிப்பா ரெனைப்புரந் தாள்வார் சிராமலை நன்னுதலாய்
கடிப்பார் பறையொலி கங்குலி னாழியிற் காவலர்கள்
அடிப்பா ரடிக்கென தாவி யிடிக்கர வாகியதே. (௧௬)

---

216. ஆருயிரனையார் - தலைவர். அலமந்து - சுழன்று. துன்னாரென - பகைவரைப்போல.

217. ஊசலின் - ஊசலைப்போல. அனை - தாய். ஞாளி - நாய். ஞாளி துயிலாது குரைக்கின்றது.

218. அன்பர்ப் பெருமையினால் - தலைவரைப் பெருமையினாலே. விரகம் - பிரிவு. உற்றார் - உறவினர். உழலும்பொருட்டு அழல் பரந்ததுவோ.

219. பொடிப்பு - மயிர்முகிழ்த்தல். இருமாமுனிவோர் - பதஞ்சலி வியாக்கிரபாதர். கடிப்பு - குறுந்தடி. ஆழியின் - கடலொலிபோல. அடிப்பு ஆர் - அடித்தல் ஆர்ந்த. என் ஆவி இடிக்கு அஞ்சும் அரவாகியது.

### நிலவு வெளிப்படுதல்.

220. திக்கும் புலியி னதளு முடுத்துத் திகழரவும்
அக்கும் புனையும் பிரான்றன் சிராமலை யன்பர்வர
வொக்கும் படியன்றிக் காயு மதியினை யோர்ந்துரகம்
கக்கும் படியன்றி நுங்கமின் னேதவங் கண்டிலமே. (கஎ)

### கூகை குழறல்.

221. ஓகை யொடுந்தமை யுள்ளுநர் தம்முளத் துள்ளுறையும்
பாகை நிகர்மொழி பாகர் சிராமலை பாடலர்போல்
தோகை யனமட மாதிவ ணுமஞ்சச் சூழ்பொழில்வாய்க்
கூகை யிரவிற் குழறொலி தென்றிசைக் கூற்றொலியே. (கஅ)

### கோழி குரற்காட்டல்.

222. மாலா யுதம்பெறச் சாத்துகண் ணாரு மலர்ப்பதத்தார்
சூலா யுதங்கொண்ட கையார் சிராமலைத் தூமொழியாய்
வேலா யுதங்கொண்டு மேவன்பர் தம்மையவ் வேளெனவோ
காலா யுதமெதிர்ந் தோவாது கூவுமிக் கங்குலிலே. (க௯)

## கரு. வரைதல் வேட்கை.

### தலைவியைப் பாங்கி பருவரல் வினாதல்.

223. காவைப் பொருந்திக் கடிமது வார்ந்து கமழுமுல்லைப்
பூவைப் பறித்திடத் தைத்தது வோமுகை பொற்கரத்தில்
சேவைப் பரியென வூர்வோன் சிராமலை சேரலர்போல்
ஏவைப் பொருவிழி யாயென்னை நீதுய ரெய்தியதே. (க)

---

220. திசையையும் புலித்தோலையும். காயும் - எறிக்கின்ற, சுடுகின்ற. நுங்க - விழுங்க. கண்டிலம் - செய்திலம். நுங்குதற்குத் தவஞ் செய்திலம்; நுங்கினால் அன்பர் வருவரென்றபடி.

221. பாகை நிகர் மொழி - உமாதேவியார். தோகை அன - மயிலை ஒத்த. மாதென்றது பாங்கியைநோக்கி. இவண் நாம் அஞ்ச. கூகை - கோட்டான். ஒலி யமன் ஒலியைப்போல் உயிரைக் கவர்கின்றது.

222. ஆயுதம் பெற - சக்கராயுதத்தைப் பெறும்பொருட்டு. கண் ஆரும் - கண் பொருந்திய. தலைவரை முருகக் கடவுளென்று எண்ணியோ. காலாயுதம் - கோழி.

223. ஆர்ந்து - நிரம்பி. நின்னுடைய பொற்காத்தில் முல்லை அரும்பு தைத்ததுவோ. முகை - அரும்பு. சேவை - இடபத்தை. ஏவைப் பொரு - அம்பை ஒத்த.



### அருமறை செவிலி அறிந்தமை கூறல்.

224. மதிபூத்த வேணிப் பிரான்றன் சிராமலை மன்னரென்றன்
நிதிபூத்த பூண்முலை தோய்ந்தகன் றிட்டபின் னேரிழையாய்
நுதிபூத்த வேற்கண் சிவந்ததென் னென்றன ணோக்கிச்சிற்றிற்
றுதிபூத்த முத்த மிடறுஞ் சிவப்பெனச் சொற்றனனே. (உ)

### தலைவி தலைவன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்.

225. தாயு ஞமலியு மூரொடு காவலர் தாமுமெல்போற்
காயு மதியமுங் கூகையுங் கோழியுங் காரிருடீர்
வாயு முறங்கிடக் காண்கில மெங்ஙன் வருவரன்பர்
ஏயு மதியணி யெம்மான் சிராமலை யேந்திழையே. (ந)

### தலைவி தலைமகனூர்க்குச் செல்ல ஒருப்படுதல்.

226. பெம்மா னெமக்கரு ளெம்மான் சிராமலை பேணலர்போல்
விம்மா வெழுமுலை தம்மா லுறநமை விட்டகன்ற
இம்மா நிலம்புக ழெம்மாவி யார்நகர்க் கெய்துவமோ
அம்மா வினித்துனி நம்மாற் பொறுப்ப தரிதணங்கே. (ச)

### பாங்கி இறைவனைப் பழித்தல்.

227. மருவார் புரநகைத் தட்டார் சிராமலை வாழ்த்தலர்போல்
ஒருவா ரெனவெண்ணு முண்மை மறந்தங் குறைந்தனராற்
செருவா ரயிற்கண்ணி யன்னமும் பேடையுஞ் சேரும்புன்னைத்
தருவார் துறையவர் போலிலை யன்பினர் தாரணிக்கே. (ரு)

---

224. நிதி - பொன்; என்றது பசலையை. நேரிழை - பாங்கியே. யாய் - தாய்; எழுவாய். சிவந்தது என் - சிவந்ததற்குக் காரணம் யாது. நோக்கி என்னென்றனள். முத்தம் - முத்து. இடறும் சிவப்பு - இடறுதலால் உண்டாகிய சிவப்பு.

225. ஞமலி - நாய். எல் - சூரியன். இருள் தீர்வாயும் - இருள் தீர்ந்தபொழுதும்.

226. எழுமுலை: விளி. தம்மால்-தம் திறத்திலுண்டாகிய மயக்கத்தை. எம் ஆவியார் - எம்முயிர்போன்ற தலைவர். பி-ம். 'சிராமலை பேசலர் போல்'

227. புரத்தை அட்டாரது. எண்ணும் - யாம் எண்ணும். அன்பினரென்பது இகழ்ச்சிக்குறிப்பு.

### தலைவி இயற்பட மொழிதல்.

228. நனையார் குழலுமை பாகர் சிராமலை நாடலர்போற்
கனையார் கடற்கரைக் கைதையங் கானலிற் கான்செய்புன்னைச்
சினையா ரனமணங் கண்டுநங் காவலர் சித்தநம்மை
நினையா தொழிவது வேறிலை நம்வினை நேரிழையே. (௬)

### தலைமகள் கனவு நலிபு உரைத்தல்.

229. விற்பனர் மேவும் பிரான்றன் சிராமலை மேவுமன்பர்
வெற்பன பூண்முலை கையால் வருடி விழைந்திதழுண்
டற்பன நன்னடை மாதே கலவி யடைவிற்செயும்
சொற்பன மெய்யெனக் கண்டு விழித்திடர் தோய்ந்தனனே.

### கவினழிபு உரைத்தல்.

230. காவலர் காத லுறுமென் னெழினலங் கால்பசப்பால்
மாவல ரூரத்தி யாரும் விளங்கனி மானனைவேன்
கோவலர் போனிரை காத்தோன் பணியுங் குரைகழலோன்
நாவலர் போற்றும் பிரான்றன் சிராமலை நன்னுதலே. (௮)

### தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்.

231. மின்பூத்த வேணிப் பிரான்வாழ் சிராமலை மெல்லியலாய்
வன்பூத்த நெஞ்சினர் போலங் குறையு மகிழ்நர்க்கன்பாற்
பொன்பூத்த மேனியெற் கானமை சென்று புகல்பவர்க்கு
மன்பூத்த சீர்த்தி மிகுமென தாவியும் வாழ்ந்திடுமே. (௯)

---

228. கைதை - தாழை. கான் - நறுமணம். அனமணம் - அன்னப் பறவைகளின் மணத்தை.

229. அற்பு - அன்பு.

230. கால் பசப்பால் - தோன்றிய பசலைபால். மாவலர் ஊர்: அத்திக்கு அடை. அத்தியாரும் விளங்கனி - வேழமென்னும் நோயாலுண்ணப் பட்ட விளாம்பழம்; அந்நோயுண்டாயின் விளாம்பழத்தில் உள்ளீடில்லாமற் போகும்; "தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்" (சீவக.) எழில் நலம் பசப்பால் அழிந்தது என்பது கருத்து. நிரைகாத்தோன் - கண்ணபிரான்; நிரை - பசுக்கூட்டம்.

231. வன்பூத்த - வன்மை பொருந்திய. பொன் - பசலை. மகிழ்நர்க்குப் புகல்பவர்க்கு என இயைக்க.



### நின்குறை நீயே சென்று உரையென்றல்.

232. மறியார் தருகரத் தெம்மான் சிராமலை மாம்பொழில்வாய்
வெறியார் தருமுறி கொண்டன்று மேவிய மெய்ம்மையன்பர்
நெறியார் தருகுழ லாயுன் னுறுதுயர் நீர்மையெல்லாம்
அறியா தவரல்ல ரெவ்வாறி யான்சென் றறிவிப்பதே. (௧௦)

### அலர்பார்த்துற்ற அச்சக் கிளவி.

233. இரும்பா கியவுள மன்பா யுருக வெனைப்புரக்கும்
கரும்பா கியமொழி பாகன் சிராமலைக் காதலரால்
அரும்பா கியவம்ப ருனல ராகி யலரமின்னே
திரும்பா கியவுட லானேன்மெய் யாவி துயருறவே. (௧௧)

### ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி.

234. சிங்க நிரைநிரை யாகநின் றூர்த்துச் சினந்தடுமா
தங்க மிரிந்திட வேட்டஞ்செய் கானிற் றனித்திருளில்
அங்க மணியும் பிரான்வாழ் சிராமலை யாய்கிலர்போற்
றங்க மருவு குணத்தன்பர் தாம்வரல் சூழ்ச்சியன்றே. (௧௨)

### காம மிக்க கழிபடர் கிளவி.

235. சுரக்குங் கருணைப் பிரான்வாழ் சிராமலை தோன்றுமன்பர்
திரக்குங் குமப்புயம் யானீங்க வார்துயர் தேர்ந்துநெய்தற்
பரக்குங் குருகீ ரெனக்குரு கீரிப் படிக்குடையாய்ப்
புரக்குங் கடலீர் கணைத்தங் கடலீர் புரிதிரன்பே. (௧௩)

---

232. மறி - மான்குட்டி. வெறி - மணம். முறி - தளிர். நெறி - நெளிவு.

233. அம்பல் - சிலரறியும் பழிமொழி.
பி-ம். 'காதன்மன்னு..........யலரமின்னாள்..........வுடலானாள்'

234. மாதங்கம் இரிந்திட - யானைகள் கெட்டோட. அங்கம் - என்பு.
பி-ம். 'சிராமலையார்கிலர்', 'அன்ப நீவரல்'.

235. அன்பருடைய. திரம் - ஸ்திரம். குங்குமம் - குங்குமச்சாந்து. குருகீர் - நாரைகளே. எனக்கு உருகீர். இப்படிக்கு உடையாய் - இந்தப் பூமிக்கு ஆடையாகி. அடலீர் - வருத்தம் செய்யாதீர். அன்பினைப் புரிதிர்.

**தலைவி தன்னுட் கையாறெய்திடு கிளவி.**

236. துங்கன் சிரகிரி யெம்மா னுணவிடந் தோய்பரவாய்
சங்கஞ் சொரிதரக் கண்ணின்முத் தாரச் சலமிகவுற்
றங்கம் பசந்திடத் திங்கள்கண் டேங்கி யாற்றியென்போற்
பங்கஞ் செறிய நினக்குமுண் டோபிரி பண்பினரே. (கச)

**தலைமகள் நெறிவிலக்குவித்தல்.**

237. அனமே நமரொடு சூரலர் தூற்ற வறிந்தனையால்
மனமே லருள்கொடு வாரணங் கேசரி வாழ்வனத்திற்
கனமே யனமிடற் றூர்தஞ் சிராமலைக் காதலரைத்
தினமே வருவது போல்வார லீரெனச் செப்புகவே. (கரு)

**தலைமகள் குறிவிலக்குவித்தல்.**

238. முப்புரம் வேவ நகைத்தார் சிராமலை மொய்ம்பர்வந்தாற்
செப்புர மாமுலை யாய்நந் திருவினைச் சேர்ந்தனையூர்க்
கப்புற மேவி யிதைப்புனங் காக்கவென் றூக்கினளாங்
கிப்புற மார்புனத் தெல்லிடை யேகிலென் னென்றுரையே. ( )

**வெறி விலக்குவித்தல்.**

239. கால னழியமுன் காய்ந்தோன் சிராமலைக் காவலராற்
சேல னடுகணை தந்தவென் னோயறி சேயிழையாய்
வேல னிவருடை யாவியுண் டாடும் வெறிவிலக்கென்
றால நிறைவிழி யர்ய்நன் குணர வறிவிப்பையே. (கள)

---

236. உண - உண்ணும்படி. பரவாய் - கடலே. சங்கம் - சங்கு, வளையல். கண்ணின் முத்து - கண்ணுக்கு இனியமுத்து, கண்ணீர்த்துளி. சலம் - நீர், மனக்கலக்கம். பசந்திட - பச்சைநிறத்தையடைய, பசலையை யடைய. பங்கம் - சேறு, பழுது.

237. வாரணம் கேசரி - யானையும் சிங்கமும். கனம் - மேகம். மன மேல் அருள்கொடு வாரலீர் என இயைக்க. அனமே செப்புக.

238. செப்பு உரமாம் - செப்பினது வன்மையையுடையனவாகிய. அனை சேர்ந்து; அனை - அன்னை. இதைப்புனம் - புதுக்கொல்லை. எல் - பகல். ஏகில் என் என்று - வந்தால் என்ன குறை உள்ளதென்று. தோழி, தினைப் புனத்திற்கு எல்லிடை வருகவென்று தலைவனுக்குச் சொல்லுவாயாக.

239. சேலன்-மீனக்கொடியையுடைய மன்மதன். கணையால் உண்டாக் கப்பட்ட. காவலரால் உண்டான நோய், கணைதந்த நோயென்க. இ வருடை - இந்த ஆட்டினது; இவருடைய உயிரென்பது வேறுபொருள். விழியையுடைய யாய்; யாய் - தாய்.



என்றும், கடை 'இசை'க்குத் தொடுத்த என்றும் பொருள்கொள்க. தமிழ் என்றது அதிலுள்ள மொழிகளுக்கு ஆகுபெயர். கட்டுண்ணலால்: இதில் உண் செயப்பாட்டுவினையுருபு; தற்பொருட்டுப்பொருளதென்றும் ஆம்.

இப்பாட்டு, செவிக்கினிதாய்ச்செல்லும் மெல்லியஓசையையுடையதா யிருத்தலின் ஒழுகிசையென்னும் குணவணியது. மென்மையான எழுத்துக்கள் பலவும் வன்மையான எழுத்துக்கள் சிலவுமாக அமைந்திருத்தல் இக்குணத் திற்குக் காரணமாம். 'ஒழுகிசையென்பது வெறுத்திசையின்மை' என்பர் தண்டியாசிரியர். ஒழுகிசை - செவிக்கினியதாய்ச்செல்லும் மெல்லிசை. இதனை வடநூலார் சுகுமாரதை யென்பர். சுகுமாரதை - மிருதுத்தன்மை. வெறுத்திசை - செறிந்திசைக்கும் இசை. வெறுத்தல் - செறிதல். இதுவே கௌடருக்கும் உடன்பாடாம்.

அணி:—எவர்க்கும் பொல்லாங்கியற்றுதல் தடையாக இருக்கவும் இறை யருள்செயல் கூறப்பட்டிருத்தலில் இது மூன்றுவதாகிய பிரிநாராய்ச்சியணி யாம். அன்றியும், இறை அருள்செய்தற்கு நாய்ச்சியாருக்குக் கட்டுப்படுதலில் ஏதுத்தன்மைசம்பாவிக்கப்படுதலின் உளபுலஏதுந்தற்குறிப்பணியாம். இங்கு, தற்குறிப்பணியின் உருபாகிய திடனென்பது விரிந்துநிற்றல் காண்க. இவ் விரண்டணிகளிற் பின்னது தலைமைத்தாய் முன்னது அஃதின்றிவருதலால் உறுப்புறுப்பிக்கலவையணியாம்; 'காரியம் பிறத்தற் காந்தடையுள்ள - தாக வதுதானுதித்தலும்' என்றும், 'பொருளை மற்றொரு பொருளியற் றொடர்பால்- இஃதஃ தன்றென வெண்ணியு மதுவென் -றத்திய வசித்தல் தற்குறிப்பணி' என்றும் இதற்கு இலக்கணங் கூறுவர் சந்திராலோகநூலார். வடநூலார் இதனை விபாவனையும் உத்பிரேக்ஷையும் ஒன்றற்கொன்றுதவியாய்வந்த அங் காங்கீபாவசங்கராலங்காரமென்பர். (ரு)

6. இதழதிற் சோணை யாயுநீ நகிலத்
திணையிறுங் கபத்திரை யாயும்
சிதகறு கோவின் பெருக்கெனும் பெருக்கிற்
சிறந்தசீர்ச் சரச்சுவதி யாயும்
விதலைசெய் பகுதி தோய்விலாச் சுவையில்
விரசையா யும்மியல் பானே
முதல்வியே கோதை யாயுநர் மதையா
முதல்வனுக் காகுநின் றுயால்.

**பதவுரை:**—முதல்வியே! - ஜகத்காரணவஸ்துவாகிய திருவரங்கமன்னனாது தேவியாரே!; நீ - தேவரீர்; முதல்வனுக்கு - அவ்வழகியமணவாளனுக்கு; இதழதில் - திருவதாரத்தினிடத்திலே; சோணையாயும் - சோணாநதியாக இருந்தும் (அருணவருணத்தையுடையராயிருந்தும்); நருமதையா - நருமதாநதியாக (இன்பத்தை விளைப்பவராக); ஆகுகின்றாய் - ஆகுகின்றீர் நகிலத்து - திருமுலைத்தடங்களில்; இணையில் - ஒப்பில்லாத; துங்கபத்திரையாயும் - துங்கபத்திராநதியாக இருந்தும் (பெருமையும் பேரழகும் உடையராயிருந்தும்); நருமதையா ஆகுகின்றாய்; சிதகு அறு - குற்றங்களைப் போக்குகின்ற; கோவின்பெருக்கெனும் பெருக்கில் - தீர்த்தப்பிரவாகமென்னும் செல்வத்திலே (வாக்கின்பெருமையென்னும் வைபவத்திலே); சிறந்த - மேலான; சீர் - மகிமையுடைய; சரச்சுவதியாயும் - சரஸ்வதீநதியாக விருந்தும் (வாகீசுவரியின் றன்மையையுடையராயிருந்தும்) நருமதையா ஆகுகின்றாய்; விதலைசெய் - நடுக்கத்தைவிளைக்கின்ற; பகுதிதோய்விலா - ப்ரக்ருதி சம்பந்தமில்லாததாயிருக்கிற; சுவையில் - தீர்த்தத்திலேலே (பகவத்பக்திரசத்தாலே); விரசையாயும் - விரஜாநதியாயிருந்தும் (இராஜஸ தாமஸ குணங்களால்வரும் குற்றமற்றவராயிருந்தும்); நருமதையா ஆகுகின்றாய்; இயல்பானே - சுபாவத்திலே; கோதையாயும் - கோதாவரிநதியாயிருந்தும் (பூமாலை சூடியும் பாமாலை பாடியும் கொடுப்பவராகவிருந்தும்); நருமதையா ஆகுகின்றாய் எ-று. ஆல் அசை.

**கருத்து:**—திருப்பவளத்தில் அருணவருணத்தையுடையராயிருந்தும், திருமுலைத்தடங்களில் பெருமையும் பேரழகும் உடையராயிருந்தும், வாக்கின்பெருமையென்னும் வைபவத்திலே வாகீசுவரியின் தன்மையையுடையராயிருந்தும், பகவத்பக்திரசத்திலே இராஜச தாமத குணங்களால் வரும் குற்றமில்லாதவராயிருந்தும், இயல்பிலே கோதையாயிருந்தும் இன்பத்தை விளைப்பவராகுகின்றீர் என்பது.

**விசேடக்குறிப்பு:**—இப்பாட்டில் ஆயும் என்பதற்கெல்லாம் ஆகவிருந்தும் என்று பொருள்கொள்ளவேண்டும். சோணை என்பதற்கு ஆருண்ணியவதி என்று பெயர். (அதாவது—செம்மையான காந்தியையுடையவள் என்பது.) துங்கம் பத்திரம் என்னுஞ் சொற்கள் முறையே உயர்வு, அழகு என்னும் பொருளுடைமையின் பெருமையும் பேரழகு முடையராயிருந்தும் எனப் பொருள்கொள்ளப்பட்டது. சிதகு - குற்றம். கோ - நீர், பெருக்கு என்னும் இரண்டில் முன்னது வெள்ளம். பின்னது விபவம்; அதாவது—செல்வம். விதலை - நடுக்கம். இது காரிய ஆகுபெயராய்ப் பிறவிப்பெரும்பிணியைக் காட்டுகிறது. பகுதி—பிரகிருதியின்றிரிபு. சுவை பண்பாகுபெயராய்த்



தீர்த்தத்தைச் சொல்லுகிறது. இதற்குப் பிரதிபதமாகிய இரசம் என்னும் சொல்லுக்கு இப்பொருளுண்மையுணர்க. கோதையென்னும் மொழிக்குச் சூடிக்கொடுத்தநாய்ச்சியாரென்ற பொருளேயன்றிக் கோதாவரிநதியென்னும் பொருளு முண்மையின் அதற்கேற்ப இரண்டுபொருள்படும். சோணை முதலிய சொற்களையமைத்துப் பல அலங்காரங்களமையும்படி சமத்காரமாக முதனூலிற் சுலோகஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நூல் மொழிபெயர்ப்பு நூலாதலின் தமிழிலமையாத சொற்களை முதனூலிலிருந்தபடியே அமைத்திருக்கிறது.

கருத்திற் காட்டிய பொருள் குறிப்பாகத்தோன்றுதலாலே இப்பாட்டு உதாரமென்னுங் குணவணியாம். "உதார மென்ப தோதிய செய்யுளிற், குறிப்பி னொருபொருள் நெறிப்படத் தோன்றல்" என்பர் தண்டியாசிரியர். இதற்கு வடமொழிப் பெயரும் இதுவே. குறிப்பாவது புத்தியால் ஊகித்தறிதல்.

**அணி:**—பெருக்கெனும்பெருக்கு: அனுப்பிராசமென்னுஞ் சொல்லணி. சோணையாயும் நருமதையாகுகின்றாய் என்பது முதலிய ஐந்துவாக்கியங்களிலும் ஓரிடத்துள்ளனவும், காரணகாரியங்களாகாதனவுமாகிய இரண்டுதருமங்களுக்குப் பகைமை தோன்றியழியுமாறு சொல்லப்படுதலாலே முரண்விளைந்தழிவணியாம்! எங்ஙனமெனில் சோணையாயும் நருமதையாகுகின்றாயெனவே முரண்விளைந்து அருணவருணத்தையுடையராயிருந்தும் அழகியமணவாளனுக்கு இன்பத்தை விளைக்கின்றீரென்று பொருள்பட்டு அஃது தழிந்துவிடுதலினென்க. இதுபோலவே மற்றைய நான்குவாக்கியங்களையுங்கொள்க. இவ்வாறன்றிச் சோணையாயும் துங்கபத்திரையாயாகுகின்றாய்;—துங்கபத்திரையாயும் சரச்சுவதியாய் ஆகுகின்றாய்; சரச்சுவதியாயும் விரஜையாயாகுகின்றாய்; விரஜையாயும் கோதையாயாகுகின்றாய்; கோதையாயும் நருமதையாயாகுகின்றாய்: என்று இடையே சிலசொற்களைவிட்டுத் துங்கபத்திரைமுதலிய நான்கினுமிருந்த ஆயும் என்பதைப் பிரித்து ஆகுகின்றாயென்பதைக் கூட்டித் துங்கபத்திரைமுதலிய நான்கையும் ஆவர்த்தித்து மேற்கூறிய அணியாகவே கொள்ளலாம்! இதில் உள்ளவாறேயுரையாமல் பிரித்தல், கூட்டல் ஆவர்த்தித்தல், விடுதல் முதலிய பிரயாசமுண்மை உணரத்தக்கது. "கருதுமோ ரிடத்தவாய்க் காரணங் காரியம், எலாத் தருமமிரண்டன் மேலும், தோன்றி யழியும் பகைமை தொடுத்து, மொழித லென்ப முரண்விளைந் தழிவே" என்பர் சந்திராலோகநூலார்! வடநூலார் இதனை விரோதாபாசாலங்காரமென்பர்.

**இரண்டாவது அர்த்தம்:**—முதல்வியே! நீ முதல்வனுக்கு இதழதிற் சோணையாகவும், நகிலத்தில் துங்கபத்திரையாகவும், கோப்பெருக்கெனும் பெருக்கில் சரச்சுவதியாகவும், பகுதிதோய்விலாச்சுவையில் விரஜையாக வும், தாமானதன்மையினாலே கோதையாகவும் இன்பத்தை விளைப்பவராகு கின்றீர் என்றுமாம். இங்கு ஆயும் என்பதற்கு ஆகவும் என்று பொருள் கொள்க.

**கருத்து:**—பலபடியாலும் பர்த்தாவுக்குப் பரமாநந்தத்தை விளைக்கிறீ ரென்பது.

**அணி:**—இப்படிப்பொருள்கொள்ளும்போது இப்பாட்டு விடயபேதத்தா லே ஒருவரே முதல்வியென்னும் ஒருபொருளினிடத்திற் சோணைமுதலிய பல பொருள்களை யாரோபித்திருத்தலாலே பலபடப்புனைவணியுமாம். இது பலபொருட்சொற்றொடரணியின் றுணைபெற்றுவந்திருக்கிறது. இதனிலக்க ணம் முன் சொல்லப்பட்டது. "பல்லோ ரொன்றிற் பல்வியல் பானும், அறி பல் பொருள்களை யாரோ பித்தலும், பின்னரும் விடய பேதங்க ளாற்பல், பொருள்களை யொருவரே புகட்டுத லும்மென, இருபா லாகும் பலபடப் புனைவே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் சிலேடோத்தாபி தோல்லேகாலங்காரமென்பர்.

**மூன்றவது அர்த்தம்:**—முதல்வியே! நீ இயல்பிலே சூடிக்கொடுத்தநாய்ச் சியாராயிருந்தும் திருவவதாரத்திலே பெரியபிராட்டியாராகவும், திருமுலைத் தடங்களிலே நீளாதேவியாராகவும், வாக்கினது பிரவாகவிபவத்திலே வாகீ சுவரியாகவும், பிரகிருதி சம்பந்தமற்றதாயிருக்கிற பகவத்பத்திரசத்திலே விரஜாதேவியாராகவும் ஆகி, அழகியமணவாளனுக்கு ஆநந்தத்தை விளைக் கின்றவராகின்றீரென்றும் பொருள்கூறலாம்.

**அணி:**—இவ்வாறு பொருள்கொள்ளும்போது இப்பாட்டு, புகழ்பொருளை யுணர்த்தும் சோணை முதலியசொற்களாலே சோணாநதி, துங்கபத்திராநதி, சரச்சுவதிநதி, விரஜாநதி, கோதாவரிநதி, நருமதாநதியென்று குறித்தறி தற்குத் தகுதியாகியபொருள் காணப்படுதலாலே குறிநிலையணியுமாம். "புகழ்பொரு ளுணர்த்தப் புகூஉஞ் சொற்களாற், கூர்ந்தறி பொருளைக் கூறல் குறிநிலை" என்பர் சந்திராலோகநூலார். வடநூலார் இதனை முத்திரா லங்காரமென்பர்.

சோணைமுதலிய சொற்கள் பெரியபிராட்டியார்முதலிய தேவிமார் களைக் குறிக்குமோவென்னிற் கூறுதும். சோணையென்பதற்குச் செய்யாள்



என்பது பொருள்— "செய்யாள் திருமார் பினிற்சேர் திருமாலே" என்றும், "செய்யவ ளின்னகலஞ் சேம மெனக்கருதி" என்றும் அருளிச்செயல்களில் பெரியபிராட்டியாருக்குச் செய்யாள், செய்யவள் என்ற திருநாமம் வந்தன காண்க. நகிலத்து இணையில் துங்கபத்திரை என்பதற்கு நீளாதேவியா ரென்பது பொருள். இவரையே நப்பின்னைப்பிராட்டியாரென்பர். "மடப் பின்னை முலையணைவான் பொருவிடையே ழடர்த்துகந்த" என்றும், 'நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா' என்றும் அருளிச்செயல்களில், திருமகள்மார்பன் திருவுள்ளமுகக்கும்படியான பெரு மையும் பேரழகும் நப்பின்னைப்பிராட்டியார் திருமுலைத்தடங்களில் மிக்கிருத் தல் குறிப்பிடப்பட்டிருத்தல் காண்க. "நீளாதுங்கஸ்தநகிரிதடீசுப்த" மென்பர் பெரியாரும். பொன், பூமி முதலிய பொருள்களுக்கும் வாக்கு முதலியவைகளுக்கும் ஒவ்வொரு அதிதேவதையுண்டென்றும், அவ்வதி தேவதைகளே எம்பெருமானுடைய சக்திகளென்றும், சக்திகளெல்லாம் அந்தச் சர்வேச்சுரனுக்குத் தேவிமார்களென்றும் அகிலநிகமாகமாதிகளுஞ் சொல்லுதலாலே இங்குச் சொல்லப்பட்ட வாகீசுவரி, விரஜை என்பவர்களும் தேவிமாரேயென்பது திண்ணம். நாய்ச்சியார் எல்லாத்தேவிமார்களுடைய அம்சமாகவும் திருவவதரித்தருளியிருக்கின்றனரென்பதை, "பூமாது நில மடந்தை பொதுவர்குலக் கொழுந்தும், பூதலத்து ளொருதிருவாய்ப் பொலிந்தா ரென்றே, நாமாது புகழ்பரப்ப வில்லி புத்தூர் நயந்தவள்" என் னும் ஸ்ரீஆண்டாள்பிள்ளைத்தமிழ்வாக்கியம் விளக்குவது காண்க.

எடுத்துக்காட்டிய முரண்விளைந்தழிவணியும், பலபடப்புனைவணியும், குறிநிலையணியும், பல்பொருட்சொற்றொடரணியும்: திலமும் தண்டுலமுஞ் சேர்ந்திருந்தாற்போல இப்பாட்டிற் சேர்ந்துவிளங்குதலாலே சேர்வையணி யாம். இதனிலக்கணம் முன்னே சொல்லப்பட்டது. (அ)

7. புவியுரு வாமுன் செவியெனப் புகலும்
புற்றினின் றுற்றவத் தவத்தோன்
கவிஞருக் கரசர்க் கரசெனப் புகழுங்
கௌரவ மெய்தினு னெனினின்
செவியதாந் திருவாய் மலரினில் வருமித்
தேனுறழ் தருதிரு மொழிகள்
அவிருமன் பருக்கின் பளிப்பவா மென்ப
தன்னையே யென்னையே வியப்பே.

**பதவுரை:**—அன்னையே - தாயே; புவி உருவாம் - பூமியின் வடிவமாகிய; உன் - தேவரீரது; செவியென - திருக்காதுகளென்று; புகலும் - சொல்லப்படுகிற; புற்றினின்று - வன்மீகத்திலிருந்து; உற்ற - தோன்றிய; அ தவத்தோன் - அந்த வான்மீகமுனிவன்; கவிஞருக்கரசர்க்கரசென - கவிசார்வபௌமனென்று; புகழும் - கொண்டாடப்படுகின்ற; கௌரவம் - கண்ணியத்தை; எய்தினானெனில் - அடைந்தானேயானால்; செவ்வியதாம் - செந்நிறமுடையதாகிய (அல்லது அழகியதாகிய); திருவாய்மலரில் - சிறந்தமுகாரவிந்தத்திலிருந்து; வரு - பெருகிய; தேன் உறழ்தரும் - மகரந்தத்துக்கு ஒப்பான; இ திருமொழிகள் - இந்தத் திருப்பாவை முதலிய திவ்யப்பிரபந்தங்கள்; அவிரும் அன்பருக்கு - தேவரீர்பக்கத்துவிளங்குகின்ற திருவரங்கமன்னனாருக்கு; இன்பு அளிப்பவாமென்பது - மனமகிழ்ச்சியைச்செய்வனவாகுமென்றுசொல்லுவது; என்னைவியப்பு - என்ன அற்புதம் (ஒன்றுமில்லை) எ-று. ஏ - அசைகள்.

**கருத்து:**—தேவரீருடைய புவியுருவிற்குச் செவியென்றுசொல்லப்படுகிற புற்றினின்றுந்தோன்றிய ஒருமுனிவன் கவிசார்வபௌமனெனக் கொண்டாடப்படுங் கௌரவத்தைப்பெற்றானென்றால் சாக்ஷாது தேவரீருடைய திருவாய்மலரினின்றுந் தோன்றிய பிரபந்தங்கள் திருவரங்கமன்னனாருடைய திருவுள்ளத்துக்கு மிகவும் மகிழ்ச்சியைச்செய்வனவாகுமென்பதில் என்ன ஆச்சரியமென்பது.

**விசேடக்குறிப்பு:**—புவியுருவென்பது அதிட்டானமான பூமியை. புற்று, புவியின்செவியென்பது சுருதிப்பிரசித்தம்.* அகரச்சுட்டு புராணவக்தாக்களாகிய வியாச பராசராதிகளுக்கும் முற்பட்டவரென்பதைக் குறிக்கும். பிரசித்தியைக் குறிக்கின்றதென்றுங் கொள்ளலாம். கௌரவமெய்தியதாவது: வேதவேத்தியனான பரமபுருடன் சக்கிரவர்த்தித்திருமகனாகத் திருவவதரித்தருளியபொழுது வேதம் வான்மீகிமுனிவரதுவாக்கிலிருந்து ஸ்ரீராமாயணரூபமாகத் திருவவதரித்ததென்றும் அதனைப் பெரியபெருமாள் திருவோலக்கங்குலையாதபடி ஒருவருமறியாமல் குசலவர்களருகிலிருந்து அசுவமேதமகாமண்டபத்திலே பிரீதியோடு கேட்டருளினரென்றும் பெருமையைப்பெற்றமையேயாம். செவ்வியது என்பது செவியது என இடைக்குறைந்தது. இதனைத் தேனுக்கடையாக்கி நாவிற்குமட்டுஞ் சுவையை விளைத்து உட்கொண்டவுடன் மதிமயக்கச்செய்யும் பிராகிருதமான தேனைப் போலாது காதிற்கும் இனிமையை விளைத்து உட்கொண்டவுடன் மதிமயர்வொழிக்கும் அழகியதான தேனெனவும் பொருள்கொள்ளலாம். இத்திருமொழிகளெனச் சுட்டியது சகலவேதாந்த சாரார்த்தத்தையும் சுருக்கமாக



விளக்கிக்காட்டுமவையாய்ப் பெண்களும் பேதைகளுங்கூட எளிதிலுணர்ந்துய்யுமாறு செவ்விய மதுரஞ்சேர்ந்த செந்தமிழ்ப்பாடல்களாலே விளங்குவனவாயிருக்கின்றனவென்று யாவருங் கொண்டாடும்படியான பிரசித்தியையுடையனவென்று தோற்றுவிக்கைக்கு. உத்தமவர்ணத்தில் திருவவதரித்தவர்களாய், உபயவேதாந்தப்பிரவர்த்தகர்களாய், உயர்ந்த பத்தியையுடையவர்களாயிருக்கிற அத்தியாபகர்கள் உபய பார்சுவங்களிலும் திருவோலக்கமாயிருந்து தேவரீர் திருவுள்ளமுவந்தருளும்படி அதிமதுரமாய்ச் சேவிக்கின்ற இந்தத் திருமொழிகளென்று அண்மைகுறிக்கின்றதென்றுங் கூறலாம். திருமொழிகளென்றது திருப்பாவை திருமொழி யென்ற இரண்டு பிரபந்தங்களையும். இதனை அடையடுத்த கருவியாகுபெயரென்றாவது பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயரென்றாவது கொள்க. வியப்பு என்னை யென்றது தேவரீர் தமப்பன்மார்களைப்போலே பெண்மையை யநுகரியாதே தாமானதன்மையாலே யனுபவித்த சிங்காரரசபரிதமாயிருப்பவைகளும் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் முதலிய பத்தழகோடுகூடியவைகளுமாயிருக்கிற தேவரீரருளிச்செய்த இவ்வியப்பிரபந்தங்கள் ரசிகசிரோரத்தினமாகிய திருவரங்கமன்னனாருக்கு இன்பம் பயப்பனவாக ஆகுதல் இயல்பேயாமென்றபடி.

இப்பாட்டும் செறிந்திசைக்குமிசையிலதாகத் தொடுக்கப்பட்டிருத்தலின் ஐந்தாவதுபாட்டைப்போலவே ஒழுகிசையென்னுங் குணமுடையதாம்.

**அணி:**—புற்றினின்றுற்ற, அரசர்க்கரசன், எனினின், தருதிரு, அன்பருக்கின்ப, அன்னையே என்னையே: இவற்றில் வழியெதுகையென்னுஞ் சொல்லணியுள்ளன காண்க. நாய்ச்சியாரது புவியுருவிற்குச் செவியுருவாகச் சொல்லப்படும் புற்றினின்றுண்டாகிய அம்முனிவன் கவிசார்வபௌமனென்று கொண்டாடும்படியானானெனில், அவரது திருவாய்மலரிலிருந்து நேரேதோன்றிய செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளிற்சீரிய திவ்வியப்பிரபந்தங்கள் மற்றைய அருளிச்செயலெல்லாவற்றினும் மேன்மையதாய்த் திருவரங்கமன்னனாரது திருவுள்ளத்துக்கு மிகவும் மகிழ்ச்சியை விளைக்குமென்பதில் என்ன ஆச்சரியமென்று கைமுதிகநியாயாநுசாரமாகப் பொருளமைந்திருத்தலின் இப்பாட்டுத் தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணியாம். இந்த நியாயத்தைத் தண்டாபூபிகாநியாயமென்றும், கிம்புநர்நியாயமென்றுஞ் சொல்லுப. "பொருளொன் றுரைக்கத் தண்டா பூபிகை, வழக்கான் மற்றொரு வண்பொரு டோன்றல், தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறணியே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் காவ்யார்த்தாபத்தியலங்காரமென்பர். (எ)

8. அநுபவித் திடநின் னன்பனை யுனைப்போ
லன்னையே யுன்னுடை முன்னோர்தம்
புனிதபத் தியினை யிரத்திய தாகப்
புத்திசெய் துற்றிடும் பிரிவில்
துனிதவிர் புணர்விற் றோன்றிய வற்றைச்
சொலும்பல துறைத்தொடர் புகளால்
மனதினை யின்பச் சுவைமய மாக
வனைதரு கின்றன ரன்றே.

**பதவுரை:**—அன்னையே - தாயே; உன்னுடைமுன்னோர் - தேவரீர் திருத்தமப்பன்மார்களாகிய பட்டநாத பராங்குச பரகாலாதிகள்; நின் அன்பனை - தேவரீருடைய அழகியமணவாளனை; உனைப்போல் - தேவரீரைப்போல்; அநுபவித்திட - இன்பநுகரவேண்டுமென்று; தம் புனிதபத்தியினை - தமது சுத்த சாத்விகமயமான பத்தியை; இரத்தியதாக - அநுராகமாக; புத்தி செய்து - பாவித்து; உற்றிடும் - அவசியமான சில காரணங்களாலேற்படுகிற. பிரிவில் - விரகவேதனையையடைந்திருக்கும் பொழுதினும்; துனிதவிர் - (பிரிவினிலுண்டாகிய) துன்பத்தைப் போக்குகின்ற; புணர்வில் - சங்கமகாலத்தினும்; தோன்றியவற்றை - தமக்குண்டான துன்பத்தையும் இன்பத்தையும்; சொலும் பல வினைத்தொடர்புகளால் - எடுத்துரைக்கின்ற அநேகவிதமான அகப்பொருட்டுறைகளமைந்த பாசுரங்களாலே; மனதினை - அழகியமணவாளனது திருவுள்ளத்தை; இன்பச்சுவைமயமாக - சிங்காரரசபரிதமாக; வனைதருகின்றனர் - அலங்கரிக்கின்றார்கள்; அன்றே - அல்லவா (இவ்விடயம் தேவரீருக்கும் தெரிந்ததே) எ-று.

**கருத்து:**—தேவரீரைப்போலே தேவரீர் தமப்பன்மார்களாகிய ஆழ்வார்களும் தேவரீர் பிரியதமனாகிய திருவரங்கமன்னனுரையநுபவிக்கைக்குப் பெண்தன்மையை யநுகரித்துத் தமது பக்தியை ரக்தியாகப்பாவித்து விரக சங்கம காலங்களிலுண்டாகிய துன்பத்தையும் இன்பத்தையும், பலவகைப்பட்ட அகப்பொருட்டுறைகளாக அமைத்துப் பாசுரமிட்டே அவ்வழகியமணவாளன் திருவுள்ளத்தை இன்பச்சுவைமயமாகச்செய்தார்களெனில், தேவரீர் தாமானதன்மையினாலே அநுபவித்தவைகளையமைத்துத் திருவாய்மலர்ந்தருளிய திவ்யப்பிரபந்தங்கள் அவ்வாழ்வார்கள் அருளிச்செய்தபிரபந்தங்களைக் காட்டிலும் மேலாகி யெம்பெருமானை மகிழ்விக்குமென்பதில் இறும்பூதென்னையோ வென்பதாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1935-ம் வருஷ ஜூன்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1935 ஜூன் | | | வரவு 1934 ஜூன் | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு ... | 50 | ... | ... | | | |
| (2) சங்கக்காலியிடத்துக்கு மாதவாடகை வரவு ... | 30 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 80 | ... | ... | 180 | ... | ... |

| விவரம் | செலவு 1935 ஜூன் | | | செலவு 1934 ஜூன் | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 116 | ... | ... | | | |
| (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 140 | ... | ... | | | |
| (3) Stationery contingencies வகையிற்செலவு ... | 2 | 12 | 9 | | | |
| (4) தபால், தந்திவகையிற்செலவு | 3 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 261 | 12 | 9 | 1139 | 1 | 6 |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு. | 6 | ... | ... | | | |
| (2) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ... | 4 | ... | ... | | | |
| (3) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 133 | 4 | 3 | | | |
| மொத்தம் ரூ ... | 148 | 4 | 3 | 194 | 5 | ... |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 85 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ... | 20 | 12 | 8 | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ... | 113 | 8 | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செலவு. ... | 10 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 229 | 4 | 8 | 161 | 4 | ... |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு. | 81 | ... | ... | | | |
| (2) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 32 | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 113 | 8 | ... | 116 | ... | ... |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 41 | 12 | 10 | | | |
| (2) அச்சாபீஸிற்கு அச்செழுத்துக்கள் வார்த்தவகையிற் செலவு.. | 7 | 4 | 6 | | | |
| (3) ஷை ஆபீஸ் Stationery contingencies வகையிற் செலவு. | 15 | 3 | 3 | | | |
| மொத்தம் ரூ. ... | 64 | 4 | 7 | 41 | 3 | 7 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 336 | 12 | 3 | 490 | 5 | ... | ஆக மொத்தம் செலவு ரூ ... | 555 | 6 | ... | 1341 | 9 | 1 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ... | 1973 | 9 | 11 | 9258 | 7 | 4 | மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... | * 1755 | ... | 2 | 8407 | 8 | 8 |
| ஆகமொத்தம் ரூ ... | 2310 | 6 | 2 | 9748 | 12 | 4 | ஆகமொத்தம் ரூ ... | 2310 | 6 | 2 | 9748 | 12 | 4 |

*By M. U. C. B.
Pass Book Rs. 61-11- 0
M. R. C. C. Bank
Pass Book Rs. 1208- 5-11
Cash on hand Rs. 484-15- 3

1755- 0- 2

குறிப்பு—மேலேகண்ட விபரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 1755-0-2 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள முதல்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; [illegible] கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள முதலும் ரூ. 1200 [illegible] ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 26—7—'35.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—7—'35.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1935-ம்௵ ஜூலைமாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1935 ஜூலை | | | வரவு 1934 ஜூலை | | | விவரம் | செலவு 1935 ஜூலை | | | செலவு 1934 ஜூலை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION : | | | | | | | I GENERAL SECTION : | | | | | | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு... | 50 | ... | ... | | | | (1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 131 | ... | ... | | | |
| (2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 126 | 3 | 9 | | | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 140 | ... | ... | | | |
| (3) சங்கக் காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ... | 30 | ... | ... | | | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ... | 119 | 10 | 8 | | | |
| | | | | | | | (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 3 | 10 | 9 | | | |
| | | | | | | | (5) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ... | 18 | 1 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (4) Miscellaneous வரவு ... | ... | 9 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 206 | 12 | 9 | 1618 | 7 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (6) தபால், தந்தி வகையிற்செலவு | 3 | ... | ... | | | |
| மொத்தம் ரூ | 415 | 6 | 5 | 2442 | ... | 10 |

II Editorial Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) 'செந்தமிழ்'ப்பத்திரிகைச் சந்தா வகையில் வரவு .. | 4 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 144 | 10 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 148 | 10 | ... | 144 | 11 | 9 |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 85 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும்சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டிஞ்ஜென்ஸிவகையிற் செலவு. ... | 174 | 2 | 4 | | | |
| (3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு. | 87 | 8 | ... | | | |
| (4) தபால் தந்திவகையிற்செலவு | 11 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 357 | 10 | 4 | 201 | 10 | 5 |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு | 72 | ... | ... | | | |
| (2) பைண்டிங்கூலிவகையில் வரவு ... | 15 | 8 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 87 | 8 | ... | 104 | ... | ... |

III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 42 | 14 | 5 | | | |
| (2) ஷை ஆபீஸிற்கு அச்செழுத்துக்கள் வார்த்த வகையிற்செலவு | 3 | 11 | ... | | | |
| (3) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 8 | 13 | 3 | | | |
| மொத்தம் ரூ ... | 55 | 6 | 8 | 42 | 3 | ... |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 442 | 14 | 9 | 1867 | 2 | 9 | ஆக மொத்தம் செலவு ரூ. | 828 | 7 | 5 | 2685 | 14 | 3 |
| மாச ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ... | 1755 | ... | 2 | 8407 | 3 | 3 | மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ... | * 1369 | 7 | 6 | 7588 | 7 | 9 |
| ஆகமொத்தம் ரூ. ... | 2197 | 14 | 11 | 10274 | 6 | ... | ஆக மொத்தம் ரூ. ... | 2197 | 14 | 11 | 10274 | 6 | ... |
| | | | | | | | *By M. U. C. B. Pass Bk. Rs. 61-11- 0<br>M. R. C. C. Bank Pass Bk. Rs. 821- 7- 3<br>Cash on hand Rs. 486- 5- 3<br>1369- 7- 6 | | | | | | |

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 1369—7—6 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011—5—0. (2) ரூ. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000. (3) ரூ. 5000, [illegible] வட்டிக்குக் கொடுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1200. [illegible] ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, Auditor, 2—8—'35.

LAKSHMINARAYANAN,

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் ... ... | 0 | 4 | 0 |
| 2. | கருநால் (5) இனியநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14 | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மகிஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குறை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் | | ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... | ... | ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... | ... | ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... | ... | ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... | ... | ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... | ... | ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... | ... | ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... | ... | ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... | ... | ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... | ... | ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... | ... | ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... | ... | ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... | ... | ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... | ... | ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு | | ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | | ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... | ... | ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... | ... | ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... | ... | ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... | ... | ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி | ... | ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... | ... | ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... | ... | ... | 5 | 0 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷய
களைக்கொண்டுவெளியாகிவரும் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷ
சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷ
சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன
இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்
செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்
செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்க
பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—
இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்
மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீத
கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டு
வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளி
கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.